ஜநவிநோதிநி.

இல. 3, 4.] { மார்ச்சுமீ எப்பிரல்மீ } 1885. [புஸ்த. XVI.

பச்சையப்பமுதலியார் என்னும் தர்மிஷ்டருடைய சரித்திரம்.

கல்வி, செல்வம், நாகரீகமுதலியவற்றில் மிகச் சிறப்புற்றோங்கிய தொண்டைநாட்டிலே சித்திரவிசித்திரமான மாடமாளிகைகளும், கூடகோபுரங்களும், தேவாலயங்களும் நிறைந்து சைவ வைணவசமயங்கள் நிலைத்துவிளங்கப்பெற்ற திவ்யதேசமாகிய காஞ்சீபுரத்தில், அகமுடையர் குலத்தில் விசுவநாதமுதலியார் என்றொருவர் இருந்தார். இவர் பாரியை "பேதைமை யென்பது மாதர்க் கணிகலம்" என்கிறபடி அறிமடமும், அடக்கமும், பொறுமையும், ஆபரணமாகக்கொண்ட பூச்சியம்மாள் என்னும் குணவதி. இவர்கள் தங்கள் வர்ணாசிரமத்துக்குத்தக்கபடி சீவனஞ்செய்துகொண்டிருக்கையில், இரண்டு குமாரத்திகள் உண்டானார்கள். முதல் குழந்தைக்கு சுப்பம்மாள் என்றும்; இரண்டாவது புத்திரிக்கு அச்சம்மாள் என்றும் பெயர். தங்களுக்குப் புத்திரன் பிறக்க வேண்டுமென்று கடவுளைப் பிரார்த்தித்துக்கொண்டிருக்கையில், பூச்சியம்மாள் கர்ப்பவதியானாள். ஆனால் குழந்தை கர்ப்பத்திலிருக்கையிலேயே பிதா இறந்துபோய்விட்டார். பின்பு புருஷதிக்கின்றி அநாதையான பூச்சியம்மாள், தன் குமாரத்திகள் இருவரையும் அழைத்துக்கொண்டு, காஞ்சீபுரத்துக்குச் சற்று வடகிழக்கில் நாற்காத தூரத்திலிருக்கிற பெரியபாளயம்போய், தங்கள் குடும்பத்தாருக்கு இஷ்டராய், ஆற்காட்டு சுபேதாருடைய காரியங்களை நிர்வகித்துவந்த ரெட்டிராயர் என்கிற மாத்துவபிராமணர் ஆதரணையில் இருக்கையில், இங்கிலீஷ் 1754-ம் வருஷத்துக்குச் சரியான பவ வருஷத்தில் ஓர் சற்புத்திரனைப் பெற்றாள்.

"இன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய்."

அக்குழந்தை சிவந்த உருவமும், நீண்டபுருவமும், அகன்ற கண்களுமுடையதாய், நாளொருவண்ணமும் பொழுதொருமேனியுமாய், பச்சையப்பனென்று நாமதேயம்பெற்று, அதிரூபலாவண்ணியங்களுடன் வளர்ந்துகொண்டிருந்தது.

உலகத்தில் சுகதுக்கங்கள் தனித்தனி நேரிடத்தொடங்கினால், ஒன்றின்பின்னொன்றாய் அடுத்தடுத்து உண்டாவது அனுபவசித்தமாகையால், பிள்ளைக்கு ஐந்துபருவமாய்த் தெலுங்குபாஷை அப்பியசித்துக்கொண்டிருக்கையில், இவர்களுக்கு ஓர் பற்றுக்கோடாயிருந்த ரெட்டிராயர் காலஞ்சென்றுவிட்டார்.

"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்."

புருஷனிறந்தபிறகு ஓர் ஆதரவைப்பற்றிப் பிள்ளையை முன்னுக்குக்கொண்டுவரலாமென்று எண்ணியிருக்க, அத்துணையும் நாம் இழந்துவிடும்படியாயிற்றே; இனி நமக்குள்ள கொஞ்சம் தனத்தை விர்த்திபண்ணவும், ஆதரிக்கவும், ஒருவருமில்லையே. இவ் விளங்குழந்தைகளைக்கொண்டு நாம் எப்படிக் கரையேறுவோமென்று மனம்வெதும்பிப் பூச்சியம்மாள் துக்கசாகரத்தில் மூழ்கியிருக்கையில், அவ்வூரிலிருந்த ராமுரெட்டி பெண்சாதி வெங்கட்டம்மாளும் மற்றுமுள்ளவர்களும், சென்னபட்டணம்போய்ச் சேர்ந்தால் சில பெரியமனிதர்களுடைய சகாயத்தைப்பெற்று, நல்ல நிலைமைக்கு வந்துவிடலாமென்று சொன்னதைக்கேட்டு "அகதிக்கு ஆண்டவனேதுணை" என்பதையெண்ணி, தன் குமாரன் பச்சையப்பனையும் மங்கைப்பருவமடைந்த இரண்டு குமாரத்திகளையும் அழைத்துக்கொண்டு, பட்டணம்போய்ச் சேர்ந்தாள். அங்கே ஸெந்துஜார்ஜ் கோட்டைக்கு வடமேற்கு மைதானத்தைச்சார்ந்த ஒற்றைவாடையில், சாமிமேஸ்திரி தெருவென்று சொல்லப்படுகிற சிறிய சந்தின் வடபுற மேலண்டைக் கோடியிலோர் வீட்டிற் குடியிருந்துகொண்டு, தான் பெண்பிள்ளையாகையால் தன் கையிலுள்ள பணத்தை மோசம்போகாமல் விர்த்திபண்ணிக் குழந்தைகளைக் காப்பாற்றவேண்டுமேயென் றெண்ணங்கொண்டு, நல்ல கண்ணியமும், யோக்கியதையும், நம்பிக்கையும், திக்கற்றவர்களுக்கு உதவிபுரியும் பெருந்தகைமையும், உடைய பிரபுக்கள் யாரென்று விசாரிக்கையில், இவர்கள் குடியிருந்த வீட்டிற்குச் சமீபத்திலேயிருந்த ஒருவர், தன் யஜமான் போனி நாராயணபிள்ளையென்பவர் சகல நற்குணங்களும் பொருந்தியவரானதால், அம்மாள்கோரிக்கையை ஈடேற்ற வல்லவரென்று சொன்னார்.

போனி நாராயணபிள்ளையென்பவர், செங்கற்பட்டுஜில்லா பொன்னேரிதாலூகா நெய்தவாயல் கிராமத்தில், யாதவகுலத்தில் பிறந்தவர். சென்னபட்டணத்தில் இந்தியாவின் சரக்குகளை ஐரோப்பாவில் பல இடங்களுக்கு அனுப்புவது, அவ்விடத்துச் சரக்கு

களை இங்கே வரவழைப்பதுமுதலான வர்த்தகத்தொழில் செய்து வந்த மேஸ்தர் போனி என்பவருக்கும், அவருக்குப்பின் அவர் பாரியைக்கும், துபாசியாயிருந்தபடியால், இவரை இது காரண மாக போனி என்கிற அடைமொழி கொடுத்துக் கூப்பிடுகிறது வழக்கம். இவர் இங்கிலீஷ்துரைத்தனத்தாருக்குச் சிநேகிதராயி ருந்ததால், சுதேசிகளநேகருக்குத் தகுந்தவேலைகள் செய்வித்துக் கொடுத்து மேம்பாடுள்ளவராயும் இருந்தார். பிறகு செங்கல்பட்டு ஜில்லாவைச்சேர்ந்த, மெதவாயலென்னுங் கிராமத்தை ஆற்காட்டு நபாபுவினிடத்தில் சுரோத்திரியமாகப்பெற்று, அந்தக் கிராமத்தின் வரும்படி அங்கே கட்டின தர்மசத்திரத்துக்கு உபயோகமாகும் படி செய்துவந்தார். இவருடைய தர்மகுணங்களையறிந்து, பூச்சி யம்மாள் இவரை நேரிற்கண்டு தன்னெண்ணங்களைத் தெரிவித்த வுடன், அவரும் அந்த அம்மாள் இஷ்டப்படியே செய்யச் சம்மதி த்து, தனக்கு உடன்பிறந்தாள் என்னும் முறைமைகொண்டாடிக் கொடுத்தபொருளை விர்த்தியாக்கி, பச்சையப்பனுக்கு வித்தியாப் பியாசஞ் செய்துவந்தார்.

பெண்கள் இருவரில் மூத்தவளாகிய சுப்பம்மாள் புங்கத்தூர் தெய்வநாயகமுதலியாருக்கும், அச்சம்மாள் என்னும் பெயருள்ள இளையவள் கூடலூர் தெய்வநாயகமுதலியாருக்கும், பாணிக்கிர ஹணம் செய்துகொடுக்கப்பட்டு, சிலகாலம் வாழ்ந்துகொண்டிருந் தார்கள். பெரியவளுக்கு ஐயாளம்மாள் என்றொரு குமாரத்தி யும், இளையவளுக்கு முத்தையன் என்றொரு குமாரனும் பிறந்தார் கள். இக்குழந்தைகள் வளர்ந்துகொண்டிருக்கையில், கொஞ்சகாலங் கடந்தபின், இப்பெண்கள் மாங்கலியத்தோடு வெகுநாள்வாழ்ந்து கொண்டிருக்கும் பாக்கியமற்றவர்களாய், தங்கள் புருஷர்களிறந்த பின் புக்ககத்தில் தக்க ஆதாரணையின்றி, தங்களுக்குள்ள சொத் துக்களையும் எடுத்துக்கொண்டு, தாய்வீடுவந்து சேர்ந்தார்கள்.

பச்சையப்பன் பாலியத்திலேயே புத்திகூர்மையும், யுக்தியுமு டையவனாய், வியாபார தந்திரங்களையெல்லாம் செம்மையாய் அறி ந்துகொண்டு, "முயற்சி திருவினையாக்கும்" என்பதை யுணர்ந்து, வெளிதேசத்துச் சரக்குகளை மொத்தமாய் வரவழைக்கும் பெரிய வியாபாரிகளிடத்திலிருந்து, வேண்டியவளவுக்குக் கைவிலைக்கு வாங்கிவிற்கும் சிறுவியாபாரிகளிடத்தில் தரவுகாரவேலையிலமர்ந்து, சாமான்களை வாங்கவரும் ஐரோப்பியர்களுக்குச் சுதேசபாஷை தெரியாததலால், அவர்களுக்கு வேண்டியவஸ்து இன்னதென்றும், அதின் விலைமுதலானவை இன்னதென்றும் இங்கிலீஷில் தெரியப் படச்சொல்லி, வேண்டியவைகளை வாங்கிக்கொடுத்து, இருதிறத் தாரும் தனித்தனி இஷ்டத்துடன் கொடுக்கும் பொருளைப்பெற்று,

"தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு"

என்பதற்கேற்க இரப்போர்க்கும், வித்வான்களுக்கும், தன்னாற் கூடியவளவு பொருளுதவிசெய்து, தெய்வபக்தியுடையவனாய்ச் சந்நிதிகளில் கைங்கர்யங்களுக்குச் சிறிது தனஞ் செலவழித்து, மிகுந்ததைக் குடும்பத்துக்கு உதவியாகத் தன் தாயாரிடத்தில் கொடுத்துக்கொண்டுவந்தான்.

இவ்வாறு சிலநாள் நடத்திக்கொண்டிருக்கையில், தான் செய்துவரும் தொழிலில்வருமானம் நிலையில்லாமலும், தன்மனதுக்கிசைந்தபடி தர்மச் செலவுகள்செய்யப்போதுமான திரவியம் கிடைக்கத்தகுந்ததல்லாமலும் இருப்பதையிட்டு வேறுவேலையில் பிரவேசிக்க எண்ணங்கொண்டிருக்கும்போது, ஒரு ராணுவ உத்தியோகஸ்தரான இங்கிலீஷ்துரை, இவ்விளைஞனுடைய நுட்பபுத்திக்கும், வேலைகளைத் தாழ்வின்றிச் சாக்கிரதையோடும் ஊக்கத்தோடும் செய்யும் திறமைக்கும் வியந்து, தன்னோடுவரும்படி அழைக்க, அன்புடனிசைந்து, தாய்முதலானவர்களுடன் சொன்னாற் போகவொட்டார்களென்று ஒருவர்க்குந் தெரியாமல், பட்டணத்துக்குக் காததூரத்தில் பாலவாயற் சத்திரத்துக்கருகில், ராணுவப்படைகளுடன் இருந்த அந்தத் துரையிடத்தில் வேலையிலமர்ந்தான். இதைக்கேட்டபின் தாயாருக்குண்டான துக்கம் இவ்வளவென்று கூறவேண்டுமோ. "பெற்றமனம் பித்து பிள்ளைமனம் கல்" என்பது பொய்யோ?

பிறகு தாயும் தமக்கைமாரும் நாராயணபிள்ளையவர்களும் இதைக் கேள்வியுற்று, தக்கதுணையும் கண்டித்துப் புத்திசொல்வாருமின்றிப் பிள்ளைகளைச் சிறுவயதில் மனம்போனபடி விடுவது, கூடாத காரியமென்றும், நல்ல கூட்டுறவும் கல்விகேள்வியும் பழக்கமுமில்லாவிடில், சிறுவன் கெடுவானென்றும், "முளையில் வணங்காதது முதிர்ந்தபின் வணங்காது" என்றும், எண்ணிப் பிள்ளையவர்கள் தாமே புறப்பட்டுப்போய்த் தளகர்த்தனைக் கண்டுபேசி, அவனுடைய வுத்தரவின்மேல் திருப்பியழைத்துக்கொண்டுவந்தார். மகாராஜாவாயிருப்பினும், கண்டித்துப் புத்திசொல்வாரில்லாமற்போனால், கெடுப்பவரில்லாதிருந்தாலும் அழிந்துபோவானென்பது நிச்சயமாகையால், முதிர்ந்த அறிவில்லாமலும், நன்மை தீமைகளைச் செம்மையாய்ப் பகுத்தறியும் பருவம் வாராமலும், எக்காரியங்களிலும் தலையிட்டுச் செய்துமுடிக்க எத்தனிக்கும் மதர்த்த வாலிபதசையிலிருப்பவர்கள், பெரியோர் சார்படைந்து, அவர்கள் சொல்லும் புத்தியைக்கேட்டு நடவாவிட்டால், கெடுவாரென்பதற்குச் சந்தேகமுளதோ?

"இடிப்பாரை யில்லாத வேமரா மன்னன்
கெடுப்பாரி லானுங் கெடும்."

பிறகு பிள்ளையவர்கள், தென்தேசத்தில் இங்கிலீஷ்காரரது அதிகாரம் நடத்திவந்த நிக்கலஸ்துரையிடத்தில், பச்சையப்பனுக்

குத் துபாசிவேலை செய்வித்துக்கொடுத்தார். அவ்வேலையிலிருந்து கொண்டு, கொஞ்சம் திரவியம் சம்பாதித்து அதைத் தனக்குப் பிதாமுறையாய் எல்லாக்காரியங்களையும் செய்வித்து நல்வழியில் நடத்திக்கொண்டுவந்த பிள்ளையவர்களிடத்தில் மிகுந்த வணக்கத்தோடு கொடுத்து, அவர் கட்டளைப்படி தன்னுடைய தமக்கை குமாரத்தி ஐயாளம்மாளைக் கலியாணஞ்செய்துகொண்டு, சுகமாகவிருந்தார். அப்போது தெய்வ கைங்கர்யத்தில் விசேஷ ஆவலுடையவராகையால், காஞ்சீபுரத்தில் ஏகாம்பரேசுவரர் கோவிலில் சிவகாமியம்மை, ஸ்ரீபலிநாயகர் என்னும் இரண்டு விக்கிரகங்கள் சிரேஷ்டமான சிற்பிகளைக்கொண்டு வார்ப்பித்து, 1774-ஆ மார்ச்சு மீ 27உ கும்பாபிஷேகம் செய்வித்து, பங்குனிமாசம் உத்திரநக்ஷத்திரத்தில், சுவாமி திருக்கலியாணம் பிரதிவருஷமும் நடத்த அனுகூலமான மண்டபங் கட்டுவிக்கத் தீர்மானித்து, அதேதினத்தில் நல்ல முகூர்த்தகாலத்தில் கடைகால்கோலி அத்திருப்பணியை முற்றுவித்தார்.

இவ்வாறு அப்பன் என்றழைத்தவர்களெல்லாம் ஐயா என்றழைக்கும்படி, பச்சையப்பமுதலியார் ஜகத்பிரசித்தராய்த் துபாசிவேலையை மிகுந்த சாமர்த்தியத்தோடும் கவனத்தோடும் நிர்வகித்துவருகையில், 1776-ம் வருஷத்திலும், அதற்குப் பின்னும், செங்கற்பட்டுஜில்லாவைச்சார்ந்த பூவிருந்தவல்லி, திருப்பாசூர் முதலிய இடங்களில் இங்கிலீஷ்வர்த்தகக் கூட்டத்தாருக்கு மேல்வாரமாகக் கிடைக்கும் தானியங்களை ஏற்பாட்டின்படி பணமாய்ச் செலுத்துவதாக ஒருடன்படிக்கை செய்துகொண்டு, தர்மராயமுதலியார், புங்கத்தூர்ச் செங்கல்வராயமுதலியார் என்கிற இருவரைத் தமக்குச் சகாயமாக வைத்துக்கொண்டு, இங்கிலீஷ்வியாபாரிகளுக்கும் நபாப் துரைத்தனத்தைச் சார்ந்தவர்களுக்கும், நடுவாய் அநேக இனும், மாதச்சம்பளம் செலுத்துதல், ஒருவருக்குப் பணம் சேர்ப்பித்தல், கடன்பத்திரங்களுக்கு வட்டிகொடுத்தல், முதலான வியாபாரங்களை இருதிறத்தாரும் மிகவும் புகழும்படி நடத்தி, விசேஷ லாபத்தை யடைந்தார்.

முதலியார்காலத்தில் தென்னிந்தியாவில் ஐரோப்பியர் இன்ன நிலைமையி லிருந்தார்களென்பதையும் அவர்களிடத்தில் துபாசிகள் நடந்துகொண்டவிதத்தையும் குறித்துக் கொஞ்சம் சொல்லாவிட்டால், துபாசிகள் சம்பாத்தியம் இன்னதென்று விளங்காது. அப்போது இங்கிலீஷ்காரர் வியாபாரக்கூட்டத்தாராய் இருந்தார்களேயொழிய, தற்காலம் இருப்பதுபோல துரைத்தனம் செய்துவந்தவர்களல்லர். ஆனால் சென்னபட்டணத்தில் தங்கள் சேனைகளை வைத்துக்கொண்டு, ஆற்காட்டு நபாபுடன் சிநேகக்கட்டுப்பாடு செய்திருந்தார்கள். அப்போது பிராஞ்சுக்காரரும் வர்த்தகஞ்செய்யும் கருத்தை நாடினவர்களாய் வந்திருந்தார்கள். இந்தியாவில் அதிபதிகளாயிருந்த ஆற்காட்டுநபாபு, ஐதர், நிஜாம், இவர்கள் ஒருவருக்

கொருவர் சண்டையுஞ் சச்சரவுஞ்செய்துவந்ததைப் பார்த்திருந்த வர்கள் யாராயினும், தானுய் நேர்ந்தசமயத்தில், தங்களுக்கு நாடு கள் சுலபமாய்க் கிடைக்கத்தக்கதாயிருந்தால் விட்டுவிடுவார்களோ?

"காலங் கருதி யிருப்பர், கலங்காது
ஞாலங் கருது பவர்."

இது நல்லதருணமென்று அந்நிய தேசத்தாராகிய இங்கிலீஷ் காரரும் பிராஞ்சுக்காரரும், பகைக்கும் சுதேச அதிகாரிகளில் ஒவ் வொருவருக்கு ஒவ்வொரு சமயத்தில் சகாயமாயிருந்து, கொஞ் சம் கொஞ்சமாய் நாடுகளைத் தங்களுக்கு உரிமையாக்கிக்கொண் டே இருந்தார்களென்பது, இந்துதேசசரித்திரம் படித்தவர்களெல் லோருக்கும் தெரிந்தவிஷயந்தானே. அந்நிய தேசத்தாருக்கெ திரில், நம்மவர்கள் கட்டுக்குலையாமல் உட்கலகம் எவ்வளவு இருப் பினும் அதை ஏறத்தாழ ஓர்முடிவுசெய்யும் திடனும், ஒருமைப்பாடு முண்டாயிருந்து, தக்கபலமுள்ளவர்களைச் சகாயமாகப்பெற்ருல்,

"சொல்லையிரும்புனத்துக் குற்றியடைந்தபுல்
ஒல்காவேயாகு முழவருழுபடைக்கு."

என்பதுபோல, சத்துருவுக்கு இடம் கிடைப்பது கஷ்டசாத்திய மாகும். இவ்வாறு அரசாட்சி மாறிக்கொண்டிருக்கையில், கிழக் கிந்தியா வர்த்தகக்கூட்டத்தாராகிய இங்கிலீஷ் கம்பெனியாரும், நபாபும் ஒன்ருயிருக்கும்போதும், வேறு பிரிந்திருக்கும்போதும், கடிதங்கள் எழுதவும், பதில் விஷயங்களைத் தெரிவிக்கவும், அனு கூலமாயும் ராச்சிய நடவடிக்கைகளில், ஒவ்வொருவருடைய அபிப் பிராயங்களையுங் கண்டறிந்த இங்கிலீஷ் உத்தியோகஸ்தர்களுக்கு உண்டாயிருந்த வருமானத்தைக் கணக்கிடக்கூடாதென்ருல், அவர் களுக்கு எல்லா விஷயங்களிலும் சாதகமாயிருந்து, அவர்களுக்கு லாபங்கிடைக்கும் வேலைகளில் முக்கிய உதவியாயிருந்தவர்களான துபாசிகளின் சம்பாத்தியத்தைச் சொல்லவேண்டுமோ? ஒவ்வொரு காரியத்திலும் அளவற்ற தனம் கிடைத்துக்கொண்டிருக்கும். இந்த துபாசிகள் இங்கிலீஷ்பாஷை செம்மையாய்க் கற்றுக்கொண்ட வர்களல்லர். சிலருக்கு எழுதத்தெரியும்; சிலருக்கு அதுவும் தெரி யாது. ஆனுல் எல்லோருக்கும் மிதமாய்ப் பேசத்தெரிந்திருந்தது. வெளியில் புறப்படும்போது பச்சைக்கல்முருகு, பெரியகடுக்கன், தோடா, மோதிரம், ரத்தினமாலை முதலான ஆபரணங்கள் பூண்டு தலையில் பாகையும், நெடுஅங்கியும், அதன்மேல் சரிகை நடுக் கட்டும் கட்டி, கையில் சிவப்புப்பட்டுத்துண்டுபிடித்துச், சால்வை போர்த்துக்கொண்டு, பல்லக்கிலாவது பெரியவண்டிகளிலாவது சவாரிசெய்துவந்தார்கள்.

பச்சையப்பமுதலியார், நாளடைவில் உயர்ந்த பேரும்புக ழும்பெற்று, இங்கிலீஷ் கம்பெனியாருடைய உத்தியோகத்தில் முதன்மை பெற்றிருந்த ஜோஸப்ஸலிவன் துரையிடத்தில், பெரிய

துபாசியானூர். இந்தத் துரையை, நபாபு வாலாஜா என்பவர் ராச்சியதந்திர வியாபாரங்களில் பங்காளத்துக் கவர்ன்மெண்டாரிடத்தில் 1781-ஹூ மார்ச்சுமீ அனுப்பி, கர்நாடகதேசத்துக்கு நபாபே அதிபதியானவர் என்றும், இது விஷயத்தில் கம்பெனியார் பிரவேசிக்கிறது தகாததென்றும், 10 பட்டாளங்களை மாத்திரம் இவர் சேவகத்தில் வைக்கவேண்டுமென்றும், அவர்களுடைய செலவைமாத்திரம் பெற்றுக்கொள்ள ஏற்பாடுசெய்யவேண்டுமென்றும், தமக்குப்பின் இளையகுமாரனுக்கு ராச்சியம் கொடுப்பிக்கவேண்டுமென்றும், ஐதரைச் செயித்தபின் ஒருபங்கு தமதுவசத்தில் விடவேண்டுமென்றும், தாம் இங்கிலீஷ்கம்பெனியாருக்குக் கொடுக்கவேண்டிய கடனைத் தீர்க்கும் விஷயத்தில் கூடியசகாயம் செய்யவேண்டியதென்றும், இவற்றைக்குறித்துப் பேசி முடிவுசெய்யக் கேட்டுக்கொண்டார். அப்படியே ஸலிவன் துரைபோய்த், தம்மாற் கூடியவரையில் நபாபுக்கு அனுகூலமான முடிவுசெய்துகொண்டும் நபாபு ஆஸ்தானத்திலிருந்து இங்கிலீஷ்காரர் பிரதிநிதியாய் வேலைபார்க்கும்படி நியமனம்பெற்றும் திரும்பினூர். தஞ்சாவூர்சீமையை நபாபுக்குக் கொடுப்பிக்கத் தங்களுக்கு அதிகாரமில்லையென்று, பங்காளதுரைத்தனத்தார் சொன்னபோதிலும், கடன்விஷயத்தில் சிலருக்கு முக்கால்பங்கும், சிலருக்கு முழுப்பங்கும், கொடுக்கப் பத்திரங்கள் கொடுத்து, நபாபு தேசத்து வருமானத்தில் தீர்க்கும்படி ஒத்துக்கொண்டும், மற்ற விஷயங்களில் ஸலிவன்துரை கேட்டுக்கொண்டபடியே செய்ய ஒப்புக்கொண்டார்கள். அந்த ஏற்பாட்டில் ஐதர் யுத்தம்முடிகிறவரையில், நபாபின் குடும்பரக்ஷணைக்கு வேண்டிய தனம் கொடுத்து வருகிறதும் மற்ற தேச வருமானங்களை இங்கிலீஷ்காரர் பற்றிக்கொள்ளுகிறதுமாக, அந்த வேலையை ஸலிவன்துரை பார்த்துவருவதாகவும் இருந்தது.

இந்தப் பெரும்பதவியில் ஸலிவன்துரை திருச்சிராப்பள்ளிக்குப் போயிருக்கையில், 1783-ம் வருஷம் இங்கிலீஷ்காரர்கோயம்புத்தூரைப்பிடித்து, டிப்புவின் தேசங்களில் பிரவேசிப்பதற்குத் தகுந்த உபாயங்களை ஸலிவன்துரை ஏற்பாடுசெய்து ராணுவ அதிபதிக்குச்சொல்ல, அவர்புகழ்ந்து அந்தப்படிநடத்தி, விசேஷ பலனடைந்தபோதும், மைசூர் அரசனை அடக்கித், திப்பு பிரபலித்திருக்கிறுனென்று, ராஜாவுக்கும் ஜனங்களுக்கும் பயமுண்டாகும்படி தூதுகளை அனுப்பும்போதும், ராணுவ தளகர்த்தனுயிருந்த கர்னல் புல்லர்டன்துரை தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி முதலானவிடங்களில் சேனைகளை விர்த்திசெய்யப்போன காலத்திலும், சாமக்கிரிகள் சேகரித்துக் கொடுக்கவும், சேனுபதியினிடத்தில் சனங்கள் பிரீதியாய் நடந்துகொள்ளும்படி செய்யவும், முதலியார் முதன்மையாய் நின்று, எல்லாம் சாதகமாகும்படிசெய்து மிகுந்த கீர்த்திபெற்றூர்.

முதலியார் தஞ்சாவூரிலிக்கும்போது, அவ்விடத்திய ராஜா இங்கிலீஷ்காரருக்குப் பிரதிவருஷமும் கொடுக்கவேண்டிய பணத்தை ஒரேவிதமாய்க்கொடுக்கச் சரிப்படாமல், சிலவேளை அத்தேசத்து நாணயங்களாகவும் சிலவேளை பூவராகன்களாகவும் சிலவேளை உண்டிகளாகவும் கொடுக்க நேரிட்டதினாலும், அவற்றை மாற்று வட்டத்துக்காக நூற்றுக்குப் பத்து அல்லது இருபதுவிழுக்காடு லாபம்தள்ளி வாங்கிக்கொண்டு, அவற்றைப் பட்டணத்துக்கு உண்டிகளாகவும், பூவராகன்களாகவும் அனுப்பிக்கொண்டுவந்தது மன்றி, சில சமஸ்தானபதிகளாயிருந்த பிரபுக்களுக்கும் பாளையக்காரருக்கும், வேண்டியகாரியங்களை அனுகூலஞ்செய்வித்துத் தமது பேராலும், நாராயணப்பிள்ளைபேராலும், கொடுக்கல் வாங்கல் முதலான நடவடிக்கைகளை நடத்திவந்ததாலும், கிடைத்த அளவிறந்த தனத்தை தபால்மூலமாய் உண்டிகளாகவும், சில சமயங்களில் அவ்விடத்துக் கொல்லர்கள்மே லெடுப்பித்தும், நாராயணப்பிள்ளையவர்களிடத்தில் சேரும்படி அனுப்பிக்கொண்டு, தஞ்சாவூரில் தமக்கிருந்த பெரிய மெத்தைவீட்டில் வாசமாயிருந்தார்.

தற்காலத்தில் சிலர் விசேஷ தனம் கிடைத்தபின், நல்ல கூட்டுறவின்மையாலோ, சிறுவயதில் நல்ல பழக்கமில்லாமையாலோ, படிப்பின்மையாலோ, அதிக செருக்கடைந்து தாம் முன்னிருந்த நிலைமையை மறந்து, பெரியோரை இகழ்ந்து நற்பதவிக்குத் தன்னைக் கொண்டுவந்த லோககர்த்தாவாகிய ஈசனைமறந்தும், கெட்ட நடவடிக்கைகளில் பிரவேசித்து தனமிழந்து மானமிழந்து மதிகெட்டுப்போனதிசையில் எல்லார்க்கும் தீயராய், மிகவும் இழிந்த நிலைமைக்கு வந்திருப்பதை நாம் கண்டிருக்கிறோமே!

“செல்வம்வந்துற்றகாலைத் தெய்வமும் சிறிதுபேணார்,
சொல்வனவறிந்துசொல்லார், சுற்றமுந்துணையுநோக்கார்;
வெல்வதேகருமமல்லால், வெம்பகைவலிதென்றெண்ணார்,
வல்வினைவிளைவுமோரார்; மண்ணின்மேல்வாழுமாந்தர்.”

முதலியாருக்குண்டாயிருந்த நற்குணங்களையும் அவருடைய பரிசுத்த மனதுக்கேற்றபடி என்றும் இறவாதபுகழுடம்பைப் பெற்று விளங்கிக்கொண்டிருப்பதையும் நமது சிறுவர்கள் கண்டு தெளிந்து, அதின் பெருமையை அறிந்து அதின்படி நடக்க முயலும்படிசெய்வது அவர்களுக்கு அளிக்கும் கல்விக்கு ஒரு ஆபரணமாகையால், அவற்றைச்சிறிது இங்கு சொல்லவேண்டியது நியாயமாகத்தோற்றுகிறது.

“முந்திரிமேற்காணி மிகுவதேற், கீழ்தன்னை இந்திரனா வெண்ணிவிடும்.”

என்கிறபடி படித்தவர்கள் கீழ்மக்களைப்போல் கர்வங்கொண்டு பெற்றோரையும் பெரியோரையும் இகழாமல், நற்குண நற்செய்கையையுடையவர்களாய்,

“காக்கபொருளா அடக்கத்தை
ஆக்கமதனி னூங்கில்லையு யிர்க்கு.”

என்றபடி அடக்கத்தையே தாம் பயின்ற கல்விக்குச் சிறந்த ஆபரணமாகக்கொண்டு, தற்காலத்தில் வழங்கும் பரீக்ஷைகளில் தேறினபோதிலும், தாம் படித்தது ஓரணுவளவாகக்கருதி, மேலும் மேலும் விர்த்திசெய்ய முயலவேண்டுமென்பது, பெரியோர்களுடைய கோரிக்கை.

"முற்று முணர்ந்தவ ரில்லை முழுவதூஉங்
கற்றன மென்று களியற்க—சிற்றுளியாற்
கல்லுந்தகருந் தகரா கனங்குழாய்
கொல்லுலைக் கூடத்தி னால்."
"கல்வி கரையில, கற்பவர் நாள்சில;
மெல்ல நினைக்கிற் பிணிபல; தெள்ளிதின்,
ஆராய்ந் தமைவுடைய கற்பவே நீரொழியப்
பாலுண் குருகிற் றெரிந்து."

முதலியார் தன் தாயாரிடத்திலும், பிதாபோலத் தன்னைப் பாதுகாத்து முன்னுக்குக் கொண்டுவந்த நாராயணபிள்ளையிடத்திலும், மிகுந்த மரியாதையுடன் நடந்துகொள்ளுவர். பெரியோர்களையும், படிப்பிற் சிறந்தவர்களையும் கண்டால், எதிர்கொண்டுபோய் அழைத்துக்கொண்டுவந்து, தக்க ஆசனத்தில் இருத்திப் பிறகு தான் உட்காருவர். அயலாருடைய விர்த்தியை நாடினவர். ஒருவரை வஞ்சனைசெய்தலும், பொய்சொல்லுதலும், புறங்கூறுதலும், பிறர் பொருளிச்சித்தலும், பொறாமைப்படுதலும், ஆகிய குணங்கள் தன்னை அணுகவொட்டாமற் காத்தவர். நடுநிலைமையாய்க் காரியங்களை நடத்தியவர், தனக்குக் கெடுதிசெய்தவருக்குப் பிரதி அவர் வெட்கும்படி நன்மைசெய்த குணவான்.

"இன்னா செய்தாரை யொறுத்த லவர்நாண
நன்னயஞ் செய்து விடல்."

பழிக்கும் பாவத்துக்கும் பயந்தவர், பிறனில் விழையாதவர். எல்லாரிடத்திலும் இன்சொல் சொல்பவர். ஏழைகளிடத்திலிரக்கமுள்ளவர். தர்மமார்க்கத்தை யநுசரித்து வரும்பொருளன்றித் தகாத வழியில் நுழைந்து, சிறிதும் ஈரமின்றிப் பொருள்கவரக் கருதியவரன்று.

"நாரங்கொண்டார், நாடுகவர்ந்தார், நடையல்லா
வாரங்கொண்டார், மற்றொருவர்க்காய் மனைவாழுந்
தாரங்கொண்டார், என்றிவர் தம்மைத் தருமந்தான்
இருங்கண்டாய்; கண்டகருய்ந் தாரெவரையா."

எவ்வித காரியங்களிருப்பினும், தான் செய்யவேண்டிய நித்திய கருமங்களைத் தவறாது செய்துவந்தார். தமக்கு ஒழிவு உண்டானால் சாஸ்திர சம்பிரதாயங்களைப் பெரியோர்கள் முகமாய்த் தெரிந்து கொள்வதும், கவிதாப் பிரசங்கம் கேட்பதும், சங்கீதசாஸ்திரம் விசேஷமாய்ப் பெருகி நிலைத்த இடம் தஞ்சாவூராதலால், அச்சாஸ்திரத்தின் அருமையறிந்து, சிரேஷ்ட வித்வான்களுக்குத்தகுந்த மரி

யாதைசெய்வதுமன்றித், தானும் சிறிது அப்பியசிப்பதும், இவ்வித மாய் நல்வழியில் காலங்கழித்துவந்தார்.

"அறிமின் அறநெறி, அஞ்சுமின்கூற்றம்,
பொறுமின் பிறர்கடுஞ்சொல், போற்றுமின்வஞ்சம்,
வெறுமின் வினைதீயார்கேண்மை, எஞ்ஞான்றும்
பெறுமின் பெரியார் வாய்ச்சொல்.''

முதலியாருக்கு, இதுவரையிலும் மக்கட்பேறில்லாதிருந்தபடியால், சந்ததி விர்த்தியினிமித்தம் இரண்டாவது கல்யாணம் நடத்திக்கொள்ளலாமென்கிற சாஸ்திர சம்மதப்படி, தாமப்போது வாசமாயிருந்த சோழநாட்டிலே வேதாரணியம் என்னும் திவ்ய தேசத்தில், உயர்குலத்தில் ஒரு சோழிய வேளாளனுடைய பெண் பழனியாய் என்பவளை விவாகம்பண்ணிக்கொண்டார். முதல் மனையாள் உயிரோடிருக்கும்போது, அவள் கருத்துக்கு அனுகூலமானவிடம் நாடி குலம், தனம், துணை இவற்றில் வேறுபாடின்றி இணக்கமுள்ளதாய் இரண்டாவது பாரியை கொள்ளக்கூடுமெனினும், இரண்டாவது விவாகத்துக்கு முதல் பெண்சாதி சம்மதம்கொடுப்பது கஷ்டம். ஒருவாறு ஒத்துக்கொண்டாலும், பிறகு ஒற்றுமையாய் வெகுநாள் வாழ்ந்துவருகிறதில்லையென்பது அனுபவசித்தம். இவ்வாறிருக்க, முதலியாருடைய பாரிகைகள் இருவரில் ஒருத்தி குலத்திலும், மற்றொருத்தி தனத்திலும், உயர்ந்திருந்ததாகச்சொன்னால், ஒற்றுமை என்பது எவ்வாறுண்டாகும். இவர்களால் குடும்பங்களில் உண்டாகும் கஷ்டநிஷ்டூரங்களை விசேஷித்துச் சொல்ல வேண்டுமோ? இவர்களுக்குள் ஒருமைப்பாடு கொஞ்சமுமில்லாதிருந்தபடியால் தனியாயிருந்துகொண்டிருந்தார்கள். இளையாளுக்கு ஒரு பெண்குழந்தை பிறந்தது.

இவ்வுலகத்தில் பிறந்து வளர்ந்து, சம்சாரமாகிற நடுக்கடலில் ஆழ்ந்து, இன்பதுன்பங்களில் முழுகிக் கிளம்பி, திகைத்து மதி மயங்கும், சீவகோடிகள் உலகப்பற்றொழித்து, ஆதிமூலமான சர்வேசுவரனிடத்தில் சரணாகதிபண்ணினால், அந்த ஆன்மாக்களுக்குப் பகவான் ஓர் மரக்கலமாகிக் கரையேற்றிவிடுவதுமன்றி, அவ்வீஸ்வரகுணாநுபவம் செய்வதே நித்தியாநந்தமென்றும், மற்றது நிலையில்லா இன்பமென்றும், கல்விகேள்விகளால் செம்மையாய் அறிந்து, முதலியார் சைவசமய தீக்ஷைகள்பெற்று, நாயன்மார்களருளிச்செய்த தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு முதலானவைகளைப் பூசாகாலத்தில் பண்வரிசைக்கிரமத்துடன் ஓதுவதுமன்றி, தம்பிரான்களுடனிருந்து பெரியபுராணம், திருவிளையாடல் முதலான புராண காலக்ஷேபஞ்செய்வதும், சிவனடியார்களை சிவசொரூபமாய் நினைத்து, அவர்களைச் செம்மையாய் ஆதரிப்பதும், அறுபத்துமூன்று நாயன்மார் திருநக்ஷத்திர தினங்களில் சாம்பமூர்த்திக்கு அபிஷேகம் செய்விப்பதும், ராத்திரிகாலத்

தில் பதிகங்களை யாழில் அமைத்து வாசிப்பதும், ஸ்தலங்களில் திருப்பணிகள் நிறைவேற்றுவதும், தீர்த்த ஸ்தல யாத்திரை போகுமவர்களுக்கு வேண்டிய பொருளுதவி செய்வதுமான சற்கயிங்கர்யங்கள் செய்து வந்தார்.

“பிறவிப்பெருங்கடனீந்துவர், நீந்தார்
இறைவனடி சேராதார்.”

இவருக்கு அப்போது சிநேகமாயிருந்தவர்களில், மதராசு பிரசிடெண்டுகளான ஆர்ச்சிபல் காம்பெல், றம்போல்ட், லார்ட்டு மகார்டினி, இவர்களுக்கு வர்த்தகம் முதலியவைகளில் துபாசியாயும், அதிக விவேகமும் ஐசுவரியமுமுள்ளவரான யாதவகுலப்பிரபுவான வாயலூர்க் குழந்தை வீராப்பெருமாள்பிள்ளை என்பவர் அதிக அந்தரங்க இஷ்டமுள்ளவர். இவர் செங்கற்பட்டுஜில்லா ஸ்ரீ ஹரிகோட்டையென்னும் கிராமத்தைச் சுரோத்திரியமாகப் பெற்று, அதை அநேகவழிகளில் தம்மாற் கட்டப்பட்ட தர்ம சத்திரங்களுக்கும், தேவஸ்தானங்களுக்கும், உபயோகமாகச் செய்தவர். இவர் சென்னபட்டணத்துக்கடுத்த சிந்தாத்திரிப்பேட்டையில் வசித்துக்கொண்டிருந்தபடியால், தாமும் அவர் சமீபத்தில் வாசஞ்செய்ய எண்ணங்கொண்டு, கோமளேசுவரபுரத்தில் வீடுகட்டிக்கொண்டு, சிலகாலம் இங்கும், சிலகாலம் தஞ்சாவூரிலுமாய் வசித்துக்கொண்டிருந்தார்.

1788-ஷுத்தில், அமரசிங்குமகாராஜா தஞ்சாவூர்ப்பட்டம் வகித்து, சிலநாள் சென்றபின் கவர்னர் ஆர்ச்சிபால்ட் கேமல்துரையவர்கள், பச்சையப்பமுதலியாரை வரவழைத்துத், தஞ்சாவூர்ராஜா இங்கிலீஷ்காரருக்குக் கட்டவேண்டிய திரவியம் குறித்த தவணைப்படி சேராததினுல், அத்தேசத்து வருமானங்களைப் பற்றிக்கொண்டு, துரைத்தனத்தாருக்குச் சேரவேண்டிய தொகையைக் கிரமப்படி செலுத்திவரவேண்டுமென்று கேட்டுக்கொண்டதுமன்றி, ராஜாவும் அப்படியே செய்யவேண்டுமென்று முதலியாருக்கு எழுதினர். தாமே தனியாய் அந்தக்காரியம் பார்த்துவரக் கூடாமையாயிருப்பதைத் தெரிவித்ததின்மேல், உவில்லியம் பீட்டிரி துரையைப்போய் வேலைபார்த்துவரும்படி நியமித்தபோது, அவருக்கு உதவியாய் முதலியாரையும், இங்கிலீஷ்கார அதிகாரிகள் அனுப்பினர்கள். அப்போது முதலியாரிடத்தில், ராஜா லக்ஷம் வராகன் கடன்வாங்கிக் கம்பெனியாருக்குக் கட்டினர். பிறகு பணம் செலுத்துவதற்குத் தக்க சில புது ஏற்பாடுகள் செய்வித்துவிட்டு, பீட்டிரிதுரை பட்டணம் வந்துவிட்டபின், முதலியார் அங்கிருந்துகொண்டு கொடுக்கல் வாங்கல் நடத்திவருகையில், அங்கே இருந்த சில ஐரோப்பியர்கள் துபாசிகளென்று பேர்கொண்ட பச்சையப்பமுதலி, சுப்பராவு, சின்னையாமுதலியார், முதலான தனிகர்கள் விசேஷ வட்டியும், லாபமும் அடைவதற்காக ராஜாவுக்கு வேண்டிய கடன்கொடுத்துக், கிராமங்

களையும் நாட்டில் விளையும் தானியங்களையும், ஈடாகவைத்துக்கொண்டு சிறிது காலங்கழித்துத், தானியங்களை உயர்ந்த விலைக்கு விற்றுவருவதால், நாட்டுக்குடிகள் மிகவும் மெலிந்துபோவதற்கும், ராஜா வீண்செலவுபண்ணுவதற்கும், இடமாகிறபடியால், துபாசிகளை அப்புறப்படுத்தினால் குடிகளுக்கு க்ஷேமமுண்டாகுமென்று, செய்துகொண்ட விண்ணப்பத்தை அநுசரித்துத், துரைத்தனத்தார் 1791-ஹுத்தில் மேஸ்தர் ராம், மேஸ்தர் புல்டன் துரைகளுக்குத், துபாசிகளைப் பட்டணம் அனுப்பிவிடவேண்டுமென்று, கண்டிதமாய் எழுதினார்கள். அதற்கு முதலியார் மிக வெறுப்படைந்து, பட்டணம்வந்து பீட்டிரி துரையினிடத்தில்போய்த், தான் 50,000 வராகன்வரையில் ராஜாவுக்குக் கடன்கொடுத்திருக்க, அது வராததற்குமுன் தஞ்சாவூரை விடச்சொல்லுவது நியாயமல்லவென்றும், தான் விசேஷ வட்டிவாங்காமலும், குடித்தனக்காரர்களை வருத்தப்படுத்தாமலும், சுப்பராவு சின்னையாமுதலானவர்கள்பேரில் குடிகள் முறையிட்டதுபோல், தன்பேரில் எவரும் எப்போதும் முறையிட்டதில்லையென்றும், கவர்னர் கேமல்துரையுடைய வேண்டுகோளின்படி தஞ்சாவூருக்குப்போன என்னைத் திரும்பி வரவழைத்தது, கிரமவிரோதமென்றும், வாதித்ததின்மேல் முதலியார்மேல் யாதொரு குற்றமுமில்லையென்று ஏற்பட்டது. பிறகு தஞ்சாவூர் தமக்கு வாசயோக்கியமாயிருப்பதால், அங்கே போகவேண்டுமென்று கேட்டதற்கு இசைந்து துரைத்தனத்தார் ஆக்ஷேபணையில்லாமல் உத்தரவுகொடுக்கப்பெற்று, 1792-ஹுத்தில் பாரிசவாயுகண்டு நிவர்த்தியாகும்பொருட்டுத் தஞ்சாவூருக்குப் போனார்.

இதனிடையில், தஞ்சாவூரிலிருந்து பட்டணம் வந்தபின் ஜோஸப் ஸலிவன்துரை குமாரருக்குத்துபாசியாய்க், கொஞ்சகாலம் இருக்கையில், தில்லைத்திருப்பதியில் அநேக திருப்பணிகளும், கட்டளைகளும், நடத்த எத்தனிக்கையில் தீக்ஷிதர்கள் இவருக்கு இணங்காமல் கலகஞ்செய்யவே, உதாரகுணமுடையவராய் விசேஷ தர்மங்கள் நடத்திவந்த மணலி சின்னையாமுதலியார், தீக்ஷிதர்களுடன் கலந்து வார்த்தைசொல்லி, முதலியாருடைய அபிப்பிராயப்படி ஒத்து நடக்கும்படி திட்டம்பண்ண பின், நடனசபாபதிக்குத் திருத்தேர் செய்வித்து பிரமோச்சவஞ்செய்ய ஆரம்பித்து, 1791-ஹு ஜூன்மீ 28உ துவசாரோகணம் செய்வித்து, ஆனித்திருமஞ்சன உற்சவம் நிறைவேற்றினார்.

மறுபடி தஞ்சாவூருக்குப் போகையில், முதலியார் போனி நாராயணப்பிள்ளை குமாரராயும், சத்தியவாதியுமான ஐயாபிள்ளையை ஸலிவன்துரை குமாரருக்குத் துபாசியாக இருக்கும்படி ஏற்படுத்திப் போனார். போனவிடத்தில், மேஸ்தர் ஸட்ரேஞ்சுதுரைக்குப் பிரியமுள்ளவராய் இருந்து, இரண்டுவருஷங்கழித்து வாயு உபத்திரவம் கொஞ்சம் லகுவாய்த், தன் வேலைகளை முன்போலவே

பார்த்துவருகையில், மதுமேகரோகமும், பேதியுங்கண்டு சரீரம் மெலிந்து, மூளைமூல உபாதியும் உண்டானதினால், தகுந்த சிகிச்சை செய்துகொள்வதற்காகக் கும்பகோணத்துக்குப்போய், அங்கே பிரமாதீச௵ மாசி௴ 29௳க்குச்சரியான, இங்கிலீஷ் 1794-௵ மார்ச்சு௴ 9௳ சேர்ந்து, இதற்குமுன்னே கட்டிவைத்துப் பிராமணர்களுக்குத் தானம்பண்ணின அக்கிரஹாரத்துக்குச் சமீபத்தில், தாம் கட்டத்தொடங்கியிருந்த சத்திரத்துவேலையை நடப்பித்துக்கொண்டிருக்கையில், தேகம் இனி நில்லாதென்று கண்டு, உலகப்பற்று ஒழிந்து சரீரானுபவத்தில் வெறுப்புற்று,

"நாய் நமதென நரிநம தெனப்பிதா
தாய் நமதென நமன்றன தெனப்பிணி
பேய் நமதென மனமதிக்கும் பெற்றிபோ
லாய் நமதெனப்படும் யாக்கையாரதே.
விடம்பயி லெயிற்றரவுரியும் வீநுழை
குடம்பையுந் தானெனுங் கொள்கைத்தேகொலா
நடம்பயில் கூத்தரினடிக்கு மைவர்வா
ழுடம்பையும் யானென வுணாக்கற்பாலதோ.
நடுத்தயா விலார்தமை நலியத்துன்பநோ
யடுத்தயா வருந்திருவடைய யாக்கையைக்
கொடுத்தயா வறம்புகழ் கொள்வனேயெனி
னெடுத்தயாக் கையின்பயனிதனின் யாவதே."

என்று யாக்கை நிலையாமைகண்டு, தெளிந்து நல்லறிவு முதிர்ச்சியடைந்து, சிவலோகத்தைத் தியானஞ்செய்து, தன்னுடைய சொத்து எல்லாவற்றையும் பகவத்கைங்கர்யத்திற்கும், கச்சித் திருப்பதி முதல் இராமேசுவரம்வரையிலுமுள்ள, சைவவைஷ்ணவஸ்தலங்களில் என்றும் அழிவில்லாமல் தர்ம கட்டளைகள் நடக்கவேண்டுமென்கிற நல்லமனதுடன் ஈசுவரார்ப்பிதஞ்செய்து, 1794-௵ மார்ச்சு௴ 22௳ மரணசாசனம் எழுதிவைத்து, 24௳ கும்பகோணத்திலிருந்து கடைசியாகத், தன் கையினாலேயே நாராயணப்பிள்ளைக்குக் கடிதம் எழுதிஅனுப்பினார். அந்தக் கடிதத்தில், முதலியார் தமக்கு நிர்யாணகாலம் சமீபித்திருப்பதையும், பிறர் சொத்தில் அணுவளவும் தப்பாமல் திருப்பிவிடவேண்டுமென்கிற திடமான மனதுடன் கணக்கு, ரொக்கம்முதலான விஷயங்களை வரையறைசெய்தும் தெரிவித்தார். பிறகு தஞ்சாவூருக்கு வடமேற்கே கொஞ்ச தூரத்தில் காவேரிக்கரையில், காசியிற்றுல்லியமாய் சிவகணங்கள் கொண்டாடும் பஞ்சநத க்ஷேத்திரமென்னும் திருவையாற்றில், மானிடதேகத்தை ஒழித்து, சாம்பவமூர்த்தியின் பாதாரவிந்தம் அடையவேண்டுமென்னும் உட்கருத்துடன் போய்ச்சேர்ந்து, பிரமாதீச௵ பங்குனி௴ 21௳ திங்கட்கிழமை அமாவாசைதிதிக்குச் சரியான, இங்கிலீஷ் 1794௵ மார்ச்சு௴ 31௳ பரலோகப்பிராப்தியானார்.

"தோன்றிற் புகழொடு தோன்றுக; வஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று."

ஊக்கமது கைவிடேல்.

"முயற்சி திருவினை யாக்கு முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்."

என முன்னோர் உரைத்திருக்கின்றபடி இவ்வுலகில் எவ்வகைத்திறத்தோர்க்கும் எவ்வித மேம்பாட்டையும் விளைவிப்பது முயற்சியேயொழிய மற்றொன்றுமல்ல; ஆகையால் இவ்வுலகில் சிறியோர் பெரியோர், எளியோர் வலியோர், தரித்திரர் தனிகர் ஆகிய அனைவர்க்கும் முயற்சி இன்றியமையாதது. "முயற்சி யுடையார் இகழ்ச்சி யடையார்."

நமதுதேசத்திலும் இதர தேசங்களிலும் கைப்பாடுபட்டு வருந்தும் ஏழைகளாய்ப் பிறந்து, விடாமுயற்சியினாலும் ஊக்கத்தினாலும் லோகோபயோகமும் செல்வாக்குமுள்ள உயர்பதம் பெற்றவர்கள் இப்பொழுது நாலுபெயர் பத்துப்பெயரல்ல, பலபெயர் உண்டு. இத்தனை திரளாயிருப்பதனால், அவர்களுக்குப் பூர்வகாலத்தில் இருந்தபடி இப்பொழுது அத்தனை விசேஷமாய்ப் பிரதிஷ்டை இல்லை. இவர்களில் உத்தமர்களான சிலருடைய வரலாறுகளை யோசிக்குமிடத்தில், சிறுபருவத்தில் பலவாறு சங்கடப்பட்டு மிடியில் அடியுண்டுகளைதெளிந்தெழுந்தாலன்றி எவனும் சித்திபெறுவது அசாத்தியமென முக்காலே மூன்றுவீசம் உறுதி சொல்லும்படி நேரிடுகின்றது. தாழ்ந்த நிலையில் பிறந்து தகுமுயற்சிசெய்து உயர்ந்தோர்கள் வெகுபெயர் அங்கிலேய ஜனப்பிரதிநிதி சபையில் சேர்ந்திருப்பது எந்நாளும் இயற்கை. கைத்தொழில்முயற்சி அங்கிலேயப்பிரஜைகளின் முதற்குறியாம். பக்குவம் அறிந்து அவர்களை உபசரித்து அவ்வாறு கௌரவப்படுத்திய சட்ட நிரூபணசபையின் யோக்கியதையல்லவோ யோக்கியதை. அங்கிலேய ஜனப்பிரதிநிதி சபையில் ஒருசமயத்தில் ஏதோ ஒரு விஷயமாக வாதம் நடக்கும்பொழுது, அச்சபையிலிருந்த ஒருவர் சிறுபருவத்தில் தாம் பருத்திநூல் நூற்கும் யந்திரசாலையில் கூலிக்கு வேலைசெய்து பட்ட சிரமத்தையும் இளைப்புத்தவிப்பையும் கேட்போர் மனம் பரிதபிக்கும்படி விவரமாய் வெளியிட்டு, எப்பொழுதேனும் தம்மால் ஆமானால், இவ்வாறு வருத்தப்படும் ஏழைகளுக்கு யோகதசைவருவிக்கத் தம்மாலாமளவிற்கு எத்தனிப்பதாகச் சங்கற்பித்திருந்ததையும் சொன்னார். அதுகேட்ட மற்றொருவர் இளமையில் இவர் இவ்வளவு தரித்திரதிசையில் இருந்தது நமக்கு நாளதுவரையும் தெரியாதே; இப்படி ஏழையாயிருந்து வரவர முயற்சிசெய்து மேன்மை அடைந்த ஒருவர், தொன்றுதொட்டுச் செல்வமும் மேம்

பாடும் குன்றுதுள்ள பெருங்குடியிற்பிறந்த சீமான்களுடன் பேதம் சிறிதுமின்றி இணையான ஆசனத்தில் இருக்க இடம் தருகின்ற ஜனப்பிரதிநிதிசபையினுடைய பெருமை இன்று நமக்கு எழுமடங்கு அதிகரித்துத் தோன்றுகின்றது என மொழிந்தார். அவர் இவ்வண்ணம் சொல்லச்சொல்ல, அதுகேட்டுச் சபையார் குதூகலித்து ஆரவாரம்செய்தார்கள்.

இவரும் இவர்போன்ற பின்னும் பலரும் தாம்பெற்ற பெருமைக்குச் செலுத்திய கிரயம் மற்றொன்றுமல்ல; அவரவர் தாம் வருந்திமுயன்ற முயற்சியேயாம். எவ்வித மேம்பாடும் சோம்பர்க்கு எட்டாக்கையில் அமைந்திருக்கின்றது. ஓயாதுஉழைக்கும் கையும் மனமுமே தன்னைத்தான் பண்படுத்தி, அறிவைப்பெருக்கி, நினைத்த காரியத்தை நினைத்தபடி கைகூட்டுவிக்கும். குலத்திற்பிறந்து குபேரதனமுடையோராயிருப்பவர்களும் தம்மில்தாம் ஏதாயினும் கனமான புகழ்பெறுவார்களானால், அது ஊக்கத்துடன் அவர்கள்செய்த முயற்சிப்பயனாக விளைந்திருக்குமேயொழிய மற்றப்படி அல்ல. ஒருவன் தன் நிலத்தை மற்றொருவனுக்குக் கொடுத்துவிடலாகுமெனினும், அறிவையும் ஞானத்தையும் கொடுத்துவிடுவது அசாத்தியம். பணக்காரன் தன் வேலையைக் கூலிகொடுத்துச் செய்விப்பான்; தான் சிந்திக்கவேண்டுவதைக் கூலிகொடுத்துச் சிந்திப்பானோ? தன்னைத்தான் பண்படுத்தியிருக்கும் இயற்கையைக் கிரயம்கொடுத்து வாங்கிக்கொள்வானோ? அப்படிச்செய்ய முடியாது. எந்தெந்தத்தொழிலிலும் மெய்வருந்தி முயல்வார்க்குமாத்திரமே மேம்பாடு உண்டாகும். இது வாஸ்தவம். இக்கொள்கை செல்வம் மிகப்பெற்றவனுக்கும் சரி, சக்கிலித் தொழிற்சாலையன்றி வேறு பாடசாலை அறியாதவர்களுக்கும் சரி, யாவருக்கும் பேதமறப் பொருந்தும்.

ஒருவனைச் சீர்ப்படுத்தி உயர்த்துவதற்குச் செல்வமும் சுகமும் வேண்டுவதில்லையெனத் தெளிவாய்த் தெரியவருகிறது. ஏனெனில் எக்காலத்தும் உலகத்துக்கு மகோபகாரம்செய்தவர்கள் வெகுவாக முதலில் கீழோராய்ப் பிறந்து பிறகு பெருமை பெற்றவர்களாகவேயிருக்கின்றனர். மேலும், துன்பம் அறியாத பெருவாழ்வானது தொழில்செய்ய முயலவும், நேரிடும் சங்கடத்திற்கு அஞ்சாது நிர்வகிக்கவும் தக்க திறமை உண்டாக்காது; உலகத்தில் எந்தக் கருமத்தையும் முயன்று சாதிக்க இன்றியமையாத் திறமை தமக்குண்டென்று எவரையும் தேற்றவும் தேற்றாது. தரித்திரம் தூர்க்கதியே அல்ல; ஆனால், தரித்திரன் ஆண்மையுடன் ஆமளவிற்கு முயற்சிசெய்துவந்தால் தரித்திரம் அவனுக்கு அரிய வரப்பிரசாதமானாலும் ஆகும்; அது உலகத்துடன் போராடுவதற்கு ஒருவனை உற்சாகப்படுத்தி எழுப்பிவிடும். இந்தப் போராட்டத்தில் பங்கப்படும் சிலருக்குச் சுகம் கிட்டினாலும் கிட்டும். மனநேர்மையும்

உண்மையுமுள்ளவர்களுக்கோ பலமும் துணிவும் ஜயமும் உண்டாகும். "மனிதர்கள் தங்கள் செல்வமும் சௌரியமும் இத்தன்மையனவென்று அறிந்திருப்பதாகத் தோன்றவில்லை. செல்வத்தை மேலாகவும் சௌரியத்தைக் கீழாகவும் அவர்கள் மதிப்பிட்டிருக்கிறார்கள். தன் பலத்தை நம்பித் தன் சுகத்தை வெறுத்து நடப்பவனுக்குத் தான் தேடிய பானத்தைப் பருகவும், இனிய அன்னத்தை உண்ணவும், ஜீவனத்திற்கு வேண்டுவதைத்தேடப் பால்மாறாமல் வகை அறிந்து உழைக்கவும், தன் வசப்பட்ட நற்பொருளைப் பதனமாய்ச் செலவிடவும் அறிவு உண்டாகும்" என ஒருவர் மொழிந்திருக்கிறார்.

சுகத்தையும், அவரவர் மனதிற்குரிய போகங்களையும் நாடுவது மனிதர்க்கு இயற்கையானகுணமாம். அதனுடன் மிகுந்த செல்வமும் அமைந்திருக்குமாயின், அது அந்தச் சுகபோகங்களையே எப்பொழுதும் தேடும்படி அவர்களை விசேஷமாய்த் தூண்டுகின்றது. ஆதலின், லக்ஷாதிபதிகளாய்ப் பிறந்தாலும், தங்கள் குலாசாரமாக வந்த தொழிலில் பிரவர்த்தித்து, இன்பத்தை நிந்தைசெய்து இருக்குநாளெல்லாம் மெய்வருந்தி உழைப்பவர்களுக்கே விசேஷ பிரதிஷ்டை உண்டு. சீமையில் சாதாரணமாய் மிகுந்த தனவான்கள் சோம்பித்திரிகிறதில்லை. அத்தனையும் அவர்களுக்குக் கௌரவந்தான். அவர்கள் அரசாட்சியின் காரியத்தைத் தங்கள் பங்கு விகிதத்திற்குக் குறையாமற்செய்து மத்தியில் நேரும் இடையூறுகளையும் பெரும்பாலும் தங்கள் பங்கு விகிதத்திற்கு மிஞ்ச அனுபவிப்பார்கள். அங்கிலேயதளம் பாசறையிருந்து தீபகற்பயுத்தம் செய்துவருகையில் ஒருநாள் கீழுத்தியோகஸ்தர் ஒருவர் தமது பட்டாளத்தின் மருங்கில் சேற்றிலும் சறுக்கிலும் கால்புதைய இழுத்திழுத்து நடந்ததைப் பார்த்துக்கொண்டிருந்த ஒருவர் "வருஷவாரி பதினையாயிரம் பௌன் அதோ போகின்றது" என மொழிந்தார்; அது எவ்வளவு கண்ணியமானது யோசித்துப்பாருங்கள். ஆண்மையும் உதாரமதியும் குலமும் தனமுமுள்ளோர் வெகுபெயர் தந்தேசத்தினது க்ஷேமத்தின்பொருட்டு வெகுவாகமுயன்று பிராண சங்கடப்பட்டுத் தப்பிப் பிழைத்தார்கள், வெகுபெயர் இறந்தும் போனார்கள்.

நற்காரியம் ஒன்று செய்ய முயல்வதற்குச் செல்வம் ஒருபோதும் ஸாதனமல்லவென்பது இதனால் தெளிவாகின்றதல்லவா? ஆதலின் தனிகராயினும் தரித்திரராயினும், ஊக்கமது கைவிடாமல் தாமே வருந்திப் பாடுபட்டு ஒரு பெருங்காரியத்தைச் சாதிப்பதே தமக்குப் பெருமையென்பதைச் செவ்வையாய்க் கண்டுணர்ந்து அதற்கு ஏற்றபடி பாடுபடக்கடவர்கள். ஊக்கத்துடன் உழைக்காதவர்களுக்கு எந்தத்துறையிலும் சித்திகிடைக்கமாட்டாது. குலமக்களாயினும், குபேரஸம்பத்துடையோராயினும், மகாராஜனாயி

னும், அகண்டபூமண்டலத்தையும் தன் ஒற்றைக்குடையின்கீழ் அடக்கியாளும் சக்கரவர்த்தியேயாயினும், அனைவரும் அவரவர் இறங்கியதுறையில் ஊக்கத்துடன் பாடுபடாமல் தீராது. பாடு இல்லாவிடின் பலனுமில்லை.

"உலையா முயற்சி களைகணு வூழின்
வலிசிந்தும் வன்மையு முண்டே....... ...." எனவும்,
"தெய்வத்தா லாகா தெனினு முயற்சி
மெய்வருந்தக் கூலி தரும்"

எனவும், தெய்வானுகூலமில்லாதார்க்கும் விடாமுயற்சி ஒன்று இருக்குமாயின், விதியையும்வென்று வெற்றிபெறலாகுமெனக் கூறியிருக்கிறதென்றால், தெய்வானுகூலமுள்ள மற்றவர்விஷயத்தில் விடாமுயற்சியால் விளையும் மேன்மை இத்தன்மையதென்பதையும் நாம் எடுத்துரைக்கவேண்டுமோ?

வாஸவதத்தையென்னும் பெண்மணி.

நமது தேசத்தில் பூர்வகாலத்திலே அகல்யை, தாரை, மந்தோதரி, சாவித்திரி முதலாய்ப் பல குலஸ்திரீகள் கல்விகேள்விகளில் மிகத்தேர்ச்சிபெற்று நற்குண நற்செய்கைகள் அமைந்தவர்களாய்ப் பதிவிரதாசிரோமணிகளெனப் பிரசித்திபெற்று மேன்மையாக வாழ்ந்திருந்தனரென்பது பலருக்குந் தெரிந்திருக்குமே. அவர்களைப்போலவே முற்காலத்தில் வாஸவதத்தையென்னும் ஒரு பெண்மணி கணவன் கருத்துக்குக் குறுக்குச்சொல்லாத கற்புநிலையுடையவளாகிச் சிறப்புற்றிருந்தாள். அவளுடைய சரிதத்தை நாடகமாகவும் காவியமாகவும் கவிகள் வருணித்து எழுதியிருக்கின்றனர். அதைக் கதையாகச் சுருக்கமாய் எளிதில்யாவரும் தெரிந்துகொள்ளும்படி அடியில் எழுதுகிறோம்.

அஸ்தினபுரியில் அரசுசெலுத்திவந்த பாண்டவர்களின் வம்சத்திலே இருபத்தாறுவது தலைமுறையிலே வத்ஸராஜன் எனப் புகழ்பெற்ற உதயனன் என்னும் ஒரு மகாராஜன் இருந்தான். அவன் கௌசாம்பீ நகரத்தின்கண் பசுவும் புலியும் ஒரு துறையில் தண்ணீர்குடிக்கவும், கிளியும் பூனையும் ஒருகூட்டினுள் விளையாடவும், பாம்பும் மயிலும் பக்கத்தில் ஆடித்திரியவும் நீதிநெறிவழுவாமல் இராஜ்யபரிபாலனம் செய்துவந்தனன்.

அக்காலத்திலே அங்கதேசத்தில் அரசாண்டுவந்த திடவர்மன் என்னும் அரசன் இந்த வத்ஸராஜனுடைய கீர்த்திப்பிரதாபங்களைக் கேட்டு மகிழ்ந்து, பிரியதர்சனையென்னும் தன் மகளை அவனுக்குக் கன்னிகாதானம் செய்யவேண்டுமென நிச்சயித்திருந்தான். இது இப்படியிருக்க வத்ஸராஜன் ஏதோ ஒரு காரணத்தினால் உஜ்ஜயினீயரசனாகிய பிரத்தியோதராஜனாலே சிறைசெய்யப்பட்டான்.

கலிங்கதேசத்தரசன், முன் பலதடவைகளில் பிரியதர்சனையைத் தனக்குக் கொடுக்கும்படி கேட்டிருந்தும் திடவர்மன் கொடாமல் வத்ஸராஜனுக்குக் கொடுக்கலானானென்னும் கோபத்தினாலே, அவனை யெதிர்க்கச்

சமயம்பார்த்திருந்து, கடைசியாய் வத்ஸராஜன் சிறைப்பட்ட செய்தி தெரிந்து, "இதுதான் தருணம், அவன் சிறைமீண்டு திரும்பி வந்துவிட்டால் அப்புறம் திடவர்மனை வெல்வது கடினம்" என்று உணர்ந்து உடனே சேனைகளைக் கூட்டிக்கொண்டுபோய் யுத்தஞ்செய்ய ஆரம்பித்தான்.

இப்படி அவர்களுக்குப் பெரும்போர் நடக்கத்தொடங்கியபோது திடவர்மனுடைய அரண்மனையிலிருந்த வினயவசுவென்னும் ஒரு பணிப்பெண்ணனவள் "இச்சமயத்தில் நமது அரசன்மகள் இங்கே இருப்பது தகாது; எப்படியாவது இவளை வத்ஸராஜனிடம் சேர்த்துவிடவேண்டும்" என்று தீர்மானித்து, ராணியின் அனுமதியின்மேல் பிரியதர்சனையைக் கூட்டிக்கொண்டு விந்தியமலையில் வாஸஞ்செய்யும் விந்தியகேதுவென்னும் காட்டரசனிடம் சென்றாள்; அங்கே அவனுடன் நேசம்பாராட்டி அம்மகளை அவன்வீட்டிலிருக்கச்செய்து, பிறகு தான் அகஸ்தியதீர்த்தத்திற்கு யாத்திரை போய்வரும்படி புறப்பட்டாள். அப்படியே யாத்திரைபோய் அவள் திரும்பி வந்து பார்க்கும்போது விந்தியகேது வாஸஞ்செய்துகொண்டிருந்த இடமெல்லாம் பாழாய்க் கிடந்தது. அதுகண்டு வினயவசு மிக்க விசனமடைந்து, "ஆகா! நமது அரசனுகிய திடவர்மனுக்கு என்ன விபத்து நேர்ந்தது! உற்றார் உறவினர்களையும் ஊரையும் விட்டுத்துறந்து நாம் இக்காட்டில் அல்லாடும்படியாகவும் நேரிட்டது! இத்தனைகாலம் நாம் ஜீவித்திருப்பதனலன்றோ இந்தத் துயரங்களையெல்லாம் அனுபவிக்கும்படியாயிற்று; விதியின் கொடுமையை என்னென்று சொல்லலாம். நாம் யாத்திரைபோய்த் திரும்பிவருவதற்குள்ளே இவ்விடம் இப்படிப் பாழாய்விட்டதே! இங்கு எங்கே தேடியும் நமது ராஜபுத்திரி அகப்படவில்லை; அவளைப் பகைவர்கள் அபகரித்துக்கொண்டுபோய்விட்டார்களோ, அல்லது கொலைசெய்துவிட்டார்களோ ஒன்றும் தெரியவில்லை. என்னசெய்யலாம்; எங்கேபோகலாம்! பிரத்தியோதனுல் சிறைசெய்யப்பட்ட வத்ஸராஜன் பிரத்தியோதனுடைய மகளையும் அழைத்துக்கொண்டு சிறைமீண்டு கௌசாம்பீ நகரத்திற்கு வந்திருப்பதாகத் தெரியவருகின்றதனுல் அவ்விடத்திற்குப் போவோமென்ருலோ, பிரியதர்சனையில்லாமல் நாம்மாத்திரம் தனியேபோனுல் என்ன சொல்கிறது" என்று இப்படி ஆலோசிக்கலானுள். கடைசியாய், "அந்தப் பெரும்போரில் திடவர்மன் பிராணனேடு தப்பிப்பிழைத்திருக்கிறுன்" என்று தன்னுடன் விந்தியகேது சொல்லியிருந்தது அவளுக்கு நினைவுவந்தது. அதனுல் அங்கேசென்று அரசனுக்குப் பணிவிடைசெய்து குறைநாளையும் கழித்துவிடுவோமென்று நிச்சயித்துத் திரும்பி அவள் திடவர்மனிடம் போய்ச் சேர்ந்துவிட்டாள்.

இதிப்படியிருக்க, முன்னம் பிரத்தியோதராஜனுல் சிறைசெய்யப்பட்டிருந்த வத்ஸராஜன் எதோ ஒருவிதமாய் அவன்மகளை அபகரித்துக்கொண்டு சிறைமீண்டு தனது கௌசாம்பீநகரத்திற்கு வந்துசேர்ந்து முன்போலே அரசாண்டுவந்தான். அப்பொழுது ஒருநாள் அவன்தனது நேசனுகிய வசந்தகனென்னும் விதூஷகனேடே வேடிக்கையாய்ப் பேசிக்கொண்டிருக்கையில் "தோழா உலகத்தில் சிறையிருப்பது துயரமென்றல்லவோ எல்லோரும் நினைக்கிறுர்கள்; யானப்படி நினைக்கவில்லை. எனெனில் நான் சிறைப்பட்டிருந்ததில் பலவிஷயங்கள் எனக்குத் தெரியவந்தன. அவையாவன; நமது சேவகர்கள் திடமுள்ளவர்களென்பதும், மந்திரிகள் புத்திமான்க

ளென்பதும், நமது தோழர்கள் இப்படிப்பட்டவர்களென்பதும், நமது குடிகள் நம்மிடத்தில் இவ்வளவு பிரீதியுடையவர்களென்பதும் தெரிந்து கொண்டேன். நான் யுத்தம் செய்வதில் வல்லவனென்பது திடமாயிற்று. அழகிய பெண்மணியும் ஒருத்தி அகப்பட்டாள். ஆகையால் என்மட்டில் சிறையிருப்பு மேன்மையாகவே முடிந்தது" என்றிப்படி வெகுநாழிகை பேசிக்கொண்டிருந்து கடைசியாய், "காட்டரசனாகிய விந்தியகேதுவை வென்றுவரும்படி நமது சேனாபதி விஜயசேனனை அனுப்பி வெகுநாளா யிற்றே; அவனின்னும் வரவில்லை; ஆகையால் நமது மந்திரி ருமண்வானை வரவழைத்து அவனுடன் சிலவிஷயம் கூறவேண்டும்" என்றான்.

இவ்வாறு பேசிக்கொண்டிருக்கையில் வாசற்காப்பான் வந்து அரசனை அடிபணிந்து "ஸேனாபதி விஜயஸேனனும் மந்திரி ருமண்வானும் வாசற் புறத்தில்வந்து காத்திருக்கிறார்கள்" என்று சொல்ல, அவர்களை உடனே அழைத்துவரும்படி அரசன் கட்டளையிட்டான். அவர்களிருவரும் உள் ளேவரும்போது, மந்திரியானவன், விஜயஸேனா மகாராஜா விடத்தில் வெகுநாழிகையிருந்து அப்போதுதான் அப்புறம்போயிருந்தாலும் திரும்பி வருவதென்றால், தான் ஒரு தப்பிதமும் செய்யாதிருந்தாலும் பெரிய குற்றம்செய்தவன்போலப் பயந்துகொண்டே செல்வது ராஜசேவகர் களின் இயற்கையாயிருக்கிறது; அப்படியேதான் இப்போது நானும் வரு கிறேனென்று சொல்லிக்கொண்டே அரசனிடம்வந்து அடிபணிந்து அர சன் கட்டளைப்படி உட்கார்ந்தான். பின்பு அவன் அரசனைநோக்கி; மகாராஜாவின் உத்திரவின்படி ஸேனாபதி விஜயஸேனன் விந்தியகேதுவை வென்றுவந்தாரென்ன, விஜயஸேனனும் அரசனைப் பணிந்து நிற்க, அவனை அரசன் அன்புடன் அணைத்து உட்காரும்படி கட்டளையிட, விஜயஸே னன் உட்கார்ந்தான். உட்கார்ந்த உடனே அரசன், விஜயசேனா, விந்தி யகேது என்னவாயினானென; விஜயஸேனன், மகாராஜா தாங்கள் கோபித் துக்கொண்டால் எப்படியாகவேண்டுமோ அப்படியே ஆயினானென்று கூறவும், அரசன் விரிவாய்ச் சொல்லும்படி கட்டளையிட, விஜயசேனன் சொல்லத்தொடங்கினான்.

மகாப்பிரபுவே, தமது ஆக்கினையின்படி ரதகஜதுரகபதாதியென்னும் நால்வகைச்சேனையோடும் புறப்பட்டு, வெகுவேகமாகச் சென்று வெகு தூரமாயிருந்தும் மூன்றுதினத்தில் அவ்விடம் சேர்ந்து, காலையில் திடீ ரென்று விந்தியகேதுவின் வீட்டைச் சுற்றிக்கொண்டோம்; பின்பு விந்தி யகேதுவும் தன் சேனைகளை ஆயத்தஞ்செய்ய அவகாசமில்லாமல் தன்னு டன்கூடத் துணையாயிருந்த சிலமாத்திரம் கூட்டிக்கொண்டு யுத்தத் திற்குப் புறப்பட்டான். பிறகு நாங்கள் அவனே விந்தியகேது வென்று அறிந்துகொண்டு அதிககோபத்துடன் அவனுடன் கூடவந்தவர்களையெல் லாம் அடித்துத்துரத்திவிட்டோம். பின்பு அவனொருவனே மிகுந்திருந்தும் தைரியத்தைவிடாமல் வெகு கடூரமாக யுத்தஞ்செய்தான். அதையெல்லாம் இங்கு விரிவாய்ச் சொல்வதில் பயனில்லை, சுருங்கச் சொல்லுகிறேன். விந்தியகேது காலால் நடந்துவந்தே மார்பால் அடித்து நமது காலாட்ப டைகளை வெகுவாய்ப் பொடியாக்கினான். பாணங்களைப்போட்டு நமது குதிரைகளை மான்போலேபாய்ந்து மூலைக்குமூலை ஓடும்படியடித்தான். பாணங்களெல்லாம் ஆய்விடவே கத்தியை யெடுத்துக்கொண்டு புறப்பட்டு வாழைமரங்களை வெட்டுவதுபோல நமது யானைகளை வெட்டத் தொடங்

கிறன். இப்படி அவன் கடும்போர்செய்துவந்தும், கடைசியாய்த் தங்கள் பிரபாவத்தால் நமது ஸேனையின் கையில் அடிபட்டு இறந்துவிட்டான் என்றான். அதுகேட்டு அரசன் மந்திரியைநோக்கி, ருமண்வனே, விந்திய கேதுவின் பராக்கிரமத்துக்கு யான் மிகவும் ஸந்தோஷப்படுகிறேன், இவ னுக்குப் பிள்ளையிருக்குமாயின் நான் சந்தோஷித்ததின் பயனை இவன் உடனே அடையும்படி செய்யலாமென்ன, விஜயசேநன், மகாராஜனே, இன்னும் ஒன்று சொல்லுகிறேன், இப்படி சகல பந்துசேனுதிகளுடனே விந்தியகேது அடிபட்டு மடிந்துவிடவே, அவனது அந்தப்புரஸ்திரீகளும் குடிகளும் ஆகிய யாவரும் விந்தியமலையிலே பதுங்கிக்கொண்டார்கள். அப் போது அவன் வீட்டினின்றும் வெகுரூபவதியான ஒரு கன்னிகை, அப்பா! அம்மா! என்று கூக்குரலிட்டுக்கொண்டு வெளிப்பட்டுவந்தாள். அவள் குணங்களையும் ரூபத்தையும் பார்த்ததில் விந்தியகேதுவின் மகளாயிருக்க லாமென்று நினைத்து இவ்விடத்திற்கு அழைத்துக்கொண்டு வந்திருக்கி ரும், மஹாராஜாசித்தம் என்றான். அதுகேட்டு அரசன் வாசற்காப்பா ளைப்பார்த்து, நீ அப்பெண்ணை அழைத்துக்கொண்டுபோய் நமது வாஸவ தத்தையினிடம் ஒப்புவித்து, "இவளை உன் உடன்பிறந்தாள்போலப் பார்த்துவருவதோடு பாட்டுக் கூத்து முதலியவைகளில் நன்றாகப் பயிற் றுவித்து இவளுக்கு யோக்கியவயது வந்தவாறே விவாகம் செய்விக்க வேண்டிய சமயத்தில் நமக்குத் தெரிவி" என்று யாம் சொன்னதாய்ச் சொல்லு என்று கட்டளையிட்டு அனுப்பினுன்.

பின்பு விநோதமாய்ச் சில நாழிகை பேசிக்கொண்டிருக்கையில், கலிங்கதேசத்தரசன் திடவர்மனுக்குச் செய்த தீமைகளைக்கேட்டு அரசன் கடுஞ்சினம்கொண்டு, விந்தியகேதுவை வென்றதற்காக விஜயசேன னுக்குத்தக்க ஸம்மானஞ்செய்து, உடனே புறப்பட்டுப்போய்க் கலிங்க ராஜனைவென்று திடவர்மனை அவனது ராஜ்ஜியத்தில் நிலைநிறுத்திவரும்படி விஜயசேனனுக்கு கட்டளையிட்டனுப்பிவிட்டுக் கிரமப்படி அரசாட்சி செலுத்தி வந்தான்.

இப்படியிருக்க வத்ஸராஜன் மனைவி வாஸவதத்தை அகஸ்தியமுனிக்கு அர்க்கியம் கொடுக்கவேண்டியதற்காக உபவாஸவிரதமிருந்து, அதற்குவே ண்டிய சடங்குகள் செய்வதற்காக விதூஷகனைவரும்படி கட்டளையிட்ட னுப்பினுள். விதூஷகனும் அதுகேட்டு வெகு ஸந்தோஷமாய்ப் புறப் பட்டு, நாம் இன்று விழித்த முகம் நல்லமுகம்; நாம் விரைவாய்ச் சென்று மஹாராஜாவின் தாராதரோத்தியானத்திலுள்ள நடபாவியில் நன்றாக நீராடி அந்தப்புரம் செல்லவேண்டும் என்று தனக்குள் சொல்லிக்கொண்டு புறப் பட்டுப்போனுன். போகையில் நடுவழியிலே வத்ஸராஜன் வருவதைக் கண்டு மகாராஜாவும் தாராதரோத்தியானத்திற்கே வருகிருர்; அவரிடஞ் சென்று அவருடன்கூடவே அந்தப்புரம் போவோமென்று நிச்சயித்து அரசனுக்கெதிரே சென்றான்.

அங்கே விதூஷகன் அரசனை நோக்கி, நண்பனே, இவ்வுத்தியானத்தி லெங்கும் அநேகவிதமான மலர்கள் கீழேவிழுந்து அவை நிரம்ப வண்டு கள் மொய்த்து ரீங்காரம்பண்ணவும், மயில் குயில்முதலிய பறவைகள் ஆடிப்பாடவும் மரங்களின் நிழல்களால் கொஞ்சமேனும் வெயிலின்றிக் குளிர்ந்து இவ்வுத்தியானம் எவ்வளவு அழகாயிருக்கின்றது பார்த்தீரா வென்ன, அரசன் ஆமாம், கரு நொச்சில்பூக்கள் முழுதும் இறைந்திருப்

பதைப்பார்த்தால் சிறுபவழங்கள் இறைந்திருப்பதுபோலிருக்கிறது; யானை மதம்போன்ற வாஸனையுடன் எழிலைப்பாலையின் காற்றுவீசுகின்றது. இதோ வண்டுகள் தாமரைப்பூக்களின் தூளிகள் கண்ணில்விழுந்து கண்ணைமூடிக் கொண்டு மதுபானம்பண்ணி மதித்து, கட்குடியன் என்னென்னமோ பிதற்றுவதுபோல ரீங்காரம்செய்கின்றன பார் என்றான். விதூஷகன், தோழா, அதோபார், எழிலைப்பாலைமரங்களின் புஷ்பங்கள் இடைவிடாமல் உதிர்வது மழைத்திவலைகள் தங்கிச் சொட்டுவதுபோலிருக்கிறது; அதைப்பார்த்தால் இன்னும் மழைக்காலம்போலவே தோன்றுகின்றது என்ன, அரசன், பலவகையினாலும் மழைக்காலம்போலவே யிருக்கிறது; முழுதிலும் பசும்புல் நிறைந்திருப்பதினாலே வாகைமலர் பரப்பினது போலும், மிருதுவாக மரகதத்தளவரிசைசெய்ததுபோலுமிருக்கிறது; அதன்மேல் இலுப்பைப்பூக்கள் விழுந்திருப்பதைப்பார்த்தால் பட்டுப்பூச்சிகள் விழுந்திருப்பதுபோலேயிருக்கிறதென்று இப்படிப் பலவிதமாய்ப்பேசிக் கொண்டு தோட்டத்தைச்சுற்றிப் பார்த்துவந்தார்கள்.

இவர்களிப்படியிருக்க, அரசி வாஸவதத்தை தனது தாதியாகிய இந்தீவரிகையை நோக்கி, அகஸ்தியமுனிக்கு அர்க்கியம் கொடுப்பதற்காக நீ நமது தாராதரொத்தியானத்திலுள்ள நொச்சில்பூக்களைப் பறித்துவாவென்று கட்டளையிட்டு, ஆரணியகைக்கும், நீ அந்த உத்தியானத்திலுள்ள ஓடையிலிருந்து சூரியனஸ்தமித்துத் தாமரைமலர்கள் மூடிக்கொள்வதற்குமுன்னே அவைகளைப் பறித்துவாவென்று கட்டளையிட்டிருந்தாள். அக்கட்டளையின்படி ஆரணியகை தோட்டத்திற்கு வரும்போது, அவள், ஆகா, நாம் எவ்வளவு உயர்ந்தகுலத்தில் ஜனித்தோம், எத்தனை பெயரை வேலையிட்டு வந்தோம், அப்படியிருந்த நாம் ஒருத்திக்கு வேலைசெய்யும்படியாயிற்றே, ஆ, தெய்வமே, இவ்வளவு துயரை எனக்கு விளைவித்தாயே! யான் முன் ஜன்மத்தில் என்ன பாவம் செய்தேன்; ஐயோ! தெரிந்திருந்தும் நாம் உயிர்வதை செய்துகொள்ளாமலிருந்ததனாலல்லவோ நமக்கு இவ்வளவு துயரம் நேர்ந்தது. இப்போது அப்படி உயிரைமாய்த்துக்கொள்ளக்கூட ஸ்வாதீனமில்லாமல் பராதீனமாயிருக்கிறோமே, ஐயோ! நாம் விந்தியகேதுவின் வீட்டிலிருந்து வெளிப்படும்போது உயர்ந்தகுலமென்று தோற்றும்படியிருந்தமையாலன்றோ நாம் இவ்வளவு சங்கடத்தை அடையும்படி நேரிட்டது. இனி இதையெல்லாம் சொல்லிப் புலம்பியென்ன பயன்! செய்யவேண்டியதைச் செய்தே தீரவேண்டுமென்றிப்படி தனக்குள்ளே சிந்தித்துக்கொண்டுபோனாள். அப்போது இந்தீவரிகை, நமது ஸகியாகிய ஆரணியகைக்கு அந்த வாவியிருக்குமிடம் தெரியாதாகையால் நாம் அதை அவளுக்குக் காட்டவேண்டுமென்று விரைவாயோடிவந்து, ஸகி, வாவிக்கு நான் உன்னை அழைத்துக்கொண்டுபோகிறேன் வாவென்ன, ஆரணியகை, ஸகி, இந்தீவரிகாய், இன்னும் வெகுதூரம் போகவேண்டுமோவென்ன, இந்தீவரிகை, இல்லை இல்லை; இந்நொச்சில் புதருக்குள்ளிருக்கிறது போ, இறங்கலாமென்று சொல்லிக்கொண்டே இருவரும் நடபாவியிலிறங்கினார்கள்.

தோட்டத்தைச் சுற்றிப்பார்த்து வரும் அரசன் விதூஷகனை நோக்கி, தோழா, நீ வேறே சிந்தையாயிருப்பதுபோலே தோன்றுகிறதே; நான் சொன்னதைக் கவனிக்கவில்லையே யென்ன; விதூஷகன் சினங்கொண்டு, உனக்கு வேலையில்லை, அதையிதைச் சொல்லிக்கொண்டு போதுபோக்குகிறாய்; எனக்கோ நாழிகையாகிவிட்டது; சீக்கிரமாய் ஓடி ஓடையில்

முழுகி மஹாராணியினிடம் போகவேண்டுமென்றான். அரசன், மூடா, நாம் ஓடைக்கரைக்கே வந்துவிட்டோம்; எல்லாப்புலன்களும் சுகமாயிருக்கவும் நீ அறியவில்லையே. பார், அன்னங்களின் சத்தம் காதுகளுக்கின்பமாய் கேட்கவில்லையா? மரங்களுடைய சந்துகளின்வழியாய் உப்பரிகைகள் கண்ணுக்கினிமையாய் தென்படவில்லையா? தாமரைப்பூவின் காற்று வாஸனையுடனே வீசவில்லையா? குளிர்ந்தகாற்று ஜில்லென்று உடம்பில் தாக்கவில்லையா? இவைகளாலேயே நாம் ஓடைக்கரை வந்துசேர்ந்தோமென்பது தெரிகின்றதே என்று சொல்லிக்கொண்டே ஓடைக்கரையின் அருகில் சென்றார்கள். அங்கே விதூஷகன் ஆரணியகையைக் கண்டு அரசனை நோக்கி, தோழா, அதோ ஒரு பெண் நிற்கிறாள், அவள் யாரோ தெரியவில்லை, முடியிலுள்ள மலர்களின் மணத்துக்காக மொய்த்துக்கொள்ளும் மதுகரங்களை ஓட்டுகின்ற அவளதுகையைப்பார்! வெகு சுந்தரியாயிருக்கிறாள் என்றான். அரசன் பார்த்து, தோழா, இவள் பூலோகத்தைப் பார்க்கவேண்டுமென்று பாதாளலோகத்திலிருந்து வந்த நாககன்னிகையாயிருக்கலாமென்றால், அப்படிச் சொல்வதற்கில்லை; நாம் முன்பு பாதாளலோகத்திற்குச் சென்று பார்த்திருக்கிறோம்; அங்கே இவ்வளவு ரூபவதிகிடையாது. நிலாவே வடிவு கொண்டு வந்ததென்னலாமெனினும் பகலில் நிலா கண்ணுக்குப் புலப்படாது. தாமரைமலர் வைத்துக்கொண்டிருப்பதினாலே ஸ்ரீமஹாலக்ஷ்மியென்று சொல்லும்படியாயிருக்கிறது. ஆனாலும் இவ்விதமென நிச்சயிக்கக் கூடவில்லை என்று ஆவலுடனே பார்த்துக்கொண்டுநிற்க, விதூஷகன், அப்பா, இதோ நமது மஹாராணியின் தாதி இந்தீவரிகை நிற்கிறாள்; நாம் இங்கிருப்பது அவளுக்குத் தெரியக்கூடாது, இப்புதரில் ஒளித்துக்கொண்டு பார்ப்போமென்ன, அரசனும் அதற்கு இசைந்து இருவரும் மறைந்து பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

ஓடையிலிறங்கின இந்தீவரிகை ஆரணியகையை நோக்கி, ஸகீ, நீ தாமரைப்பூப் பறித்துக்கொண்டு சித்தமாயிரு; நான் இந்தத் தாமரையிலையில் நொச்சில்பூப்பறித்துவருகிறேன்; இருவருமாய் மஹாராணியிடம் போகலாம் என்ன, அரசனிந்தச் சத்தம்கேட்டதும், இவர்கள் இப்போது பேசிக்கொள்வதினால் சிலவிஷயம் தெளிவாகலாமாகையால், இதை உற்றுக்கேட்போமென்று உற்றுக்கேட்டுக்கொண்டிருந்தான்.

இந்தீவரிகை இப்படி சொல்லி உடனே அப்பால் போகப்புறப்பட, ஆரணியகை, ஸகீ, நான் உன்னைவிட்டு எப்படிப் பிரிந்திருக்கிறதென்ன, இந்தீவரிகை, ஆரணியகாய், நேற்று மஹாராணி சொன்னதைப்பார்த்தால், இனி நீ யென்னைவிட்டுப் பிரிந்திருக்கவேண்டியதுதானென்று தோன்றிற்றே யென்றாள். ஆரணியகை மஹாராணி யென்ன சொன்னாளென்று கேட்க, இந்தீவரிகை, உனக்கு விவாகஞ்செய்துவைக்கவேண்டிய சமயம்வரும் போது தமக்கு நினைப்பூட்டும்படி மஹாராஜா கட்டளையிட்டிருக்கிறதாகவும், இப்போது உனக்குத்தக்கவயது வந்துவிட்டதனால் அதை மஹாராஜாவுக்குத் தெரிவிக்கப்போகிறதாகவும் சொன்னாளென்றாள். ஆரணியகை அதைக்கேட்டு வெட்கிக் காதைமூடிக்கொண்டு, போபோ, உனக்கு எப்போதும் பரிகாசம்செய்வதுதான் வேலையென்றாள். இந்தீவரிகை அப்புறம் சிறிதுதூரம் சென்று பூப்பறித்துக்கொண்டிருந்தாள்.

அரசன் இவ்வார்த்தைகளைக் கேட்கவே யெல்லாம் தனக்கு ஞாபகத்துக்குவந்துவிட, ஒகோ, இவள் விந்தியகேதுவின் மகளா! இத்தனைநாள் மோசம்

போனேமே, நல்லது கன்னிகைகளைப் பார்ப்பதினால் தோஷமில்லை, நன்ருய்ப்பார்ப்போமென்று ஆவலுடன் பார்த்துத் தோழனை நோக்கி, வஸந்தகா, இவளை எவன் விவாகஞ்செய்துக்கொள்ளப்போகிருனே அவன் வெகு பாக்கியசாலி அவன் யாரோவென்ருன்.

இவர்கள் இவ்வாறு பேசுகையில், ஆரணியகை பூப்பறித்துக்கொண்டிருந்தாள். அப்போது அவைகளிலிருந்து புறப்பட்ட வண்டுகள் கருநெய்தல் காட்டுக்குப் போகும்வழியில் இவளது முகத்தில்விழ ஆரம்பிக்க, ஆரணியகை பயந்து உத்தரீயத்தால் முகத்தைமூடிக்கொண்டு, ஸகி, இந்தீவரிகாய்! வண்டுகள் என்னைத் தொந்தரவுசெய்கின்றன; என்னைக் காப்பாற்றவேண்டுமென்று கூச்சலிட்டாள். அதுகேட்டு விதூஷகன் அரசனை நோக்கி, தோழா, இது நல்ல சமயம், இந்த வார்த்தையைக் கேட்டு இந்தீவரிகை வருவதற்குமுன்னமே நீ வாயைத்திறவாமல் அவள் கிட்டப்போ, காலடி ஓசையைக் கேட்டதும் ஆரணியகை உன்னை இந்தீவரிகையென்று நினைத்து கட்டிக்கொள்ளுவாள் என்ன, அரசனும் நல்லதென்று அப்படியே அவள் கிட்டப்போக, ஆரணியகை காலடியோசையைக் கேட்டதும், ஸகி சீக்கிரம் வாஎன்று அரசனைப் பிடித்துக்கொண்டாள். அரசனும் அவளை அணைத்துக்கொண்டு அவள் முகத்திலிருக்கும் வஸ்திரத்தை வாங்கி எதிரிலிருந்த வண்டுகளைத் தன் உத்தரீயத்தால் ஒட்டிவிட்டு, மடமானே, நீ பயப்படாதே; இந்த வண்டுகள் வாஸனைக்காக உன் முககமலத்தில்வந்து மொய்க்கின்றன; அதனேடு வெருண்டு மான்கள் விழிப்பதுபோலக் கருநெய்தல்போன்ற கண்களால் சுற்றிப்பார்ப்பதால், இவைகளைக் கருநெய்தலென நினைத்து இவைகளைவிட்டுப் போகாமலே நின்றுவிடாதோ என்ருன். ஆரணியகை அதைக் கேட்டுத் திரும்பிப்பார்த்து அரசனுயிருக்கவே பயந்து வெட்கி அரசனைவிட்டு ஒதுங்கிப்போய் நின்று, இந்தீவரிகாய், நான் கூக்குரலிடுகிறேன், உபேக்ஷிக்கிருயே என்று கூப்பிட, விதூஷகன், ஓகோ எல்லா உலகங்களையும் சிறிதும் பயமின்றிக் காக்கின்ற வத்ஸராஜன் பக்கத்தில் வந்திருக்க யாரோ ஒரு தாஸியைக் கூப்பிடுகிருயேயென்ன, ஆரணியகை அரசனைப் பார்த்து, ஆகா, இவரா வத்ஸராஜன்! நமது தகப்பனுர் நம்மை இவருக்குத்தானே தானஞ்செய்தார். நமது தகப்பனுர் செய்தது உசிதமானதுதான். நமது துரதிருஷ்டம் இப்படியாக முடிந்தது, என்னசெய்யலாம்! இனி மறுபடியும் இம்மஹாராஜாவை நாம் எப்போது பார்க்கும்படி நேரிடுமோவென்று வெகு துயரத்துடன் ஆவலாய் அரசனைப் பார்த்துக்கொண்டிருந்தாள். இதற்குள் பூப்பறிக்கப்போயிருந்த இந்தீவரிகை இவள் கூக்குரலிட்டதைக் கேட்டு, ஆரணியகாய்! இதோ வந்தேனென்று சொல்லிக்கொண்டே அவ்விடம்வர, அரசனும் விதூஷகனும் அருகிலிருந்த வாழைத்தோட்டத்தில் பதுங்கிக்கொண்டார்கள்.

இந்தீவரிகை கிட்டவந்து, ஸகியே! உன் முகம் தாமரைமலர்போலிருப்பதால் வண்டுகள் உன்னைத் தொந்தரவுசெய்கின்றன என்று இன்சொற்கள் கூறி முகத்தின் வேர்வையைத் துடைத்துக் கையைப் பிடித்துக்கொண்டு, ஸகியே, நாழிகையாய்விட்டது; நாம் மஹாராணியிடம் போவோம் வாவென்று புறப்பட, ஆரணியகை, ஆவலுடன் வாழைத்தோட்டத்தைத் திரும்பிப்பார்த்துக்கொண்டே வெகுநாழிகை தண்ணீரிலிருந்ததால் துடைகள் மரத்துப்போயின; மெதுவாய்ப் போவோம் என்று சொல்லிப் போக மனமில்லாமல் அடிக்கடி திரும்பிப்பார்த்துக்கொண்டே மெல்ல மெல்ல

இந்தீவரிகையுடன் போய்விட்டாள். பின்பு அரசனும் விதூஷகனுடன் அந்தப்புரத்துக்குப் போயினன்.

இது இப்படியிருக்க முன் திடவர்மனது அந்தப்புரத்தில் வசித்துக் கொண்டிருந்த ஸாங்கிருத்தியாயனியென்னும் ஓர் ஸன்னியாசிப்பெண் கலிங்க ராஜனால் திடவர்மன் சிறைப்பட்டபின்பு இவ்வத்ஸராஜன் அரண்மனைக்கு வந்து இவனது அந்தப்புரத்தில் வாஸவதத்தையுடனிருந்துகொண்டிருந்தாள். அவளுக்குப் பிரிய தர்சனையின் செய்தியெல்லாம் நன்றாய்த் தெரியும்; ஆயினும் ஏதோ ஒரு லௌகிகத்திற்காக அதை வாஸவதத்தைக்கு அறிவியாமலேயிருந்தாள். அந்த ஸன்னியாசிப்பெண் வத்ஸராஜன் வாஸவதத்தையை அபகரித்துவந்த சரிதத்தை உதயன சரிதமென்னும் ஓர் நாடகமாக இயற்றி, அதை அந்தப்புரத்துத் தாதிமார்களுக்குக் கற்பித்து ஆடச்செய்திருந்தாள். அப்போது அதில் ஒரு பாகத்தை நிறுத்திவைத்து கௌமுதீ மகோற்சவத்தில் ஆடும்படி ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது.

ஆரணியகையெனும் மறுபெயர் பெற்றுவிளங்கும் பிரியதர்சனையை வத்ஸராஜன் கண்டதுமுதல் அவளிடத்தில் ஆசைகொண்டு அவளை இன்னுமொருதடவை காணும் வகை யேதென்று மனம்வருந்திக்கொண்டிருந்தான். அப்படியே ஆரணியகையும் அவ்வரசனைக் கண்டதுமுதல் அவன்மேல் மிகுந்த ஆசைகொண்டிருந்தாள்.

இவ்வாறு இருக்கையில் கௌமுதீ மகோற்சவம் வந்தது. அதில் முதல் நாள் அந்நாடகத்தின் ஒருபாகம் ஆடப்பட்டது. அதில் ஆரணியகை ஏதோ ஒரு வேடம் தரித்திருந்தாள். அன்றைய ஆட்டத்தில் ஆரணியகை சில பிசகிவிட்டாளென்றாலும் அதில் மஹாராணி வாஸவதத்தைக்குக்கோபமுண்டாகவில்லை. மறுநாள் ஆட்டத்தில் ஆரணியகை வாஸவதத்தை வேஷமும், அவளது உயிர்த்தோழியாகிய மநோரமை என்பவள் வத்ஸராஜன் வேஷமும் போட்டுக்கொண்டு அந்நாடகத்தின் மிகுதியை ஆடிமுடிக்கும்படி அரசி கட்டளையிட்டாள். (இன்னும் வரும்.)

ஊர்காப்பாளரும் அவர் செய்காரியங்களும்.

போலீசார் என்று இப்போது சாதாரணமாய் வழங்கிவருகிற சொல்லுக்கு ராஜ்ஜியத்தின் காவற்காரார்கள் என்று பொருள். அவர்களுடைய கடமை என்னவென்றால், பிரஜைகளுக்கு அடிதடி கொலை காயம்முதலிய சரீரஅபாயமும் கன்னங்களவுமுதலிய பொருள்சேதமும் உண்டாகாமலும், கலகம் கூச்சல் சச்சரவுமுதலிய ஒழுங்கின்மையான தீச்செயல்கள் நடவாமலும் பாதுகாப்பதே. இத்தேசத்தில் முற்காலத்திய காவல் ஏற்பாடானது ஒரு நல்லநியாயத்தை அனுசரித்திருந்தது. அது என்னவெனில், இன்னின்ன கிராமங்களுக்கு இன்னின்னார், இன்னின்ன ஸ்தலங்களுக்கு இன்னின்னார் என்று காவற்காப்பாளராகத் தீர்மானித்து வேலையின் பொறுப்பு அங்கங்கே அவ்வவர்களிடத்தில் பிரிக்கப்பட்டிருந்தது;

அதனால் வேலை செம்மையாகநடக்க அனுகூலமுண்டு. ஆனால் அந்த ஏற்பாடு வரவரச் சீர்கெட்டு பலவான்களிடத்தில் எளியவர்கள்பலர் அகப்பட்டுக்கொண்டு பயந்து காலம்தள்ளும்படியாயிற்று. தங்க ளைத்தாங்களே பாதுகாக்கச் சக்தியற்ற அவ்வேழ்மையானவர்களை ராஜாங்கத்தாரும் ரக்ஷிக்காமல் கைவிட்டிருந்தபடியால் அவர்கள் திருடர்களையே அடைக்கலமாக அடைந்து ஒரு அற்பமான திருடன் முதல் பெரியதலைமையான திருடன்வரையில் எல்லாத்திருடர்களுக் கும் திரவியங்கொடுத்து நல்வார்த்தைசொல்லிப் பிழைப்பதைத் தவிர வேறு உபாயமில்லாதிருந்தார்கள். அந்தத் திருடர்கள் செய் யும் பதிலுபகாரம் என்னவென்றால், தாங்கள் சுயமாகத் திருடாம லிருப்பதும்தவிர, வேறுதிருடர்களுக்கும் இடங்கொடாமல் பார்த் துக்கொண்டு ஒருவேளை திருட்டுப்போனால் சொத்தைத் தேடிக்கொ ண்டுவந்து ஒப்பித்துவிடுவார்கள், அல்லது சொத்து என்னபெறு மோ அதற்கு உத்தரவாதமாவது செய்வார்கள். இப்படியாக அந்தப் பழையகாலத்துக் காவற்காரரின் பொறுப்பானது நஷ்ட த்துக்கு உத்தரவாதம் செய்வதைத்தவிர வேறல்ல; இழந்த பொரு ளுக்கு உத்தரவாதம்பண்ணிக் குற்றத்தை அடக்குவதேயல்லாமல், குற்றம்நடவாமற் காப்பதும், நடந்தால் கண்டுபிடித்துச் சிக்ஷிப்பிக் கிறதுமல்ல.

காவற்காரர் என்ற பெயரைமாத்திரம் வைத்துக்கொண்டிருந்த இத்தன்மையான திருடர்கள் யாராரெனில், முதலாவது, பாளய காரர் என்னும் நாட்டுத்தலைவர்கள்; இவர்கள் தத்தம் நாட்டிற் குள் திருடர் உரிமைகளைப் பெற்றுக்கொள்ள பாத்தியஸ்தர்கள்; தங் களை விரோதித்துக்கொள்ளாமல் சிநேகமாயிருக்கிற அண்டை அயல் கிராமத்தார்களிடத்திலும் உரிமைகளைப் பெற்றுக்கொள்வது ண்டு. இரண்டாவது, கொள்ளையடிக்கும் கள்ளர்களுக்கு நேராகத் தலைமையை நடத்தும் மேற்காவற்காரர் என்று பேருள்ளவர்கள்; இவர்களுடைய கட்டளைகளைச் சிரசாலேவகித்து நடந்துகொள் ளும் கிராமத்திருடர்கள். மூன்றாவது, இவர்களுக்குத்தான் கிராமக் காவலாளி, கிராமத்தலையாரி என்று பெயர். தீர்வையில்லாமல் மானி யமாய் கிராமத்தார் விட்டிருக்கும் நிலங்களையும் அனுபவித்துக் கொண்டு மாசூல்கள்பேரிலும் மற்றப் பொருள்கள்பேரிலும் சுதந்த ரம் வாங்குவார்கள். அன்றியும் பாளயக்காரருக்கும் மேற்காவற்கார ருக்கும் சேரவேண்டிய வரிகளை வசூல்செய்து செலுத்தத் தடை செய்பவர்களை அபகரித்தும் வருவார்கள். இதுபோன்ற துர்க் குணங்கள் குடிகொண்ட காவற்காரன் என்னும் தொழிலாளி இச் சென்னைராஜதானியில் கொஞ்சக்காலத்துக்கு முன்வரையில் ஒவ் வொரு கிராமத்திலுமுண்டு.

இப்படிப்பட்ட கொடுமைகளினின்று ஜனங்களை விடுவிக்கவே ண்டுமென்கிற நல்லெண்ணங்கொண்டு அங்கிலேயதுரைத்தனத்தார்

தாணுதார் முறைமை என்று நடந்துவந்த காவல் ஏற்பாட்டை முத லில் ஏற்படுத்தினார்கள். இதன் விசாரணை நியாயாதிபதி கையின்கீழ் நேராகவேயிருந்தது. ஆனால் நியாயாதிபதிக்கு நியாயவிசாரணை வேலையோடு தீர்வை வசூல்செய்யும் வேலையும் சேர்ந்து சில்லறை சில்லறையாக எத்தனையோ விஷயங்களைக் கவனிக்கவேண்டியிருந்தது பற்றி காவல்விசாரணை திருப்தியாக நடக்காமல், பிறகு இப்போது நடந்தேறிவரும் போலீசு டிபார்ட்மெண்டு என்பது இதரமான வேலையையுடைய அதிகாரிகளுக்குச் சம்பந்தமில்லாமல் பிரத்தியேகமான அதிகாரிகளோடு அமைக்கப்பட்டது. இந்தத் தற்காலத்துக் காவல் முறைமையைப்பற்றி இங்கே சிறிது விரிவாகச் சொல்லக் கருதுகிறோம்.

இந்தப் போலீசு ஏற்பாடு அநுஷ்டானத்துக்குவந்து 25 வருஷத்திற்கு மேலாகிறது. போலீசு சேனைமுழுமையும் போலீசு இன்ஸ்பெக்டர்ஜனரல் என்னும் அதிகாரியின் விசாரணைக்கு உட்பட்டது. சென்னைநகரத்தின் போலீசுவேலையை நுட்பமாய் நடத்திவா ஒரு போலீசு கம்மிஷனரும் அவருக்கு உதவியாக இரண்டு உத்தியோகஸ்தர்களும் இருக்கிறார்கள். வெளிநாட்டைப் பல பிரிவுகளாகப் பிரித்து ஒவ்வொருபிரிவுக்கும் ஒரு டிப்டி இன்ஸ்பெக்டர் ஜனரல் ஏற்பட்டிருக்கிறார். அன்றியும் ஒவ்வொரு ஜில்லாவுக்கும் ஒரு சூபரின்டெண்டெண்டும் அந்தந்த ஜில்லாவின் விஸ்தீரணம் ஜனக்கூட்டம் முதலிய விசேஷங்களுக்குத் தக்கபடி சூபரின்டெண்டெண்டுக்கு உதவியாக ஒரு உத்தியோகஸ்தர் அல்லது இரண்டு உத்தியோகஸ்தரும் உண்டு. இவர்களுக்குக் கீழ் இன்ஸ்பெக்டர்களும் சப் இன்ஸ்பெக்டர்களும், ஊர்க்காப்பாளர் எனத்தகும் கான்ஸ்டபில்கள் 21,860 பேரும் இருக்கிறார்கள். கான்ஸ்டபில்களுள்ளும் தாரதம்மியம் உண்டு. யுத்தம் நேருங்கால் போர்முகத்தில் நிற்கக்கூடிய ஒழுங்கான சேனையாகாமற்போனாலும், ஒரு அவசரமான சமயம் சம்பவிக்கும்போது யுத்தத்துக்கு அடுத்த காரியங்களுக்குக் கொஞ்சம் உதவும்பொருட்டு கான்ஸ்டபில்கள் ஒருவாறு ஆயுதப் பயிற்சியுடையவர்களாய் ஒரேமாதிரியான உடுப்பைத் தரித்துவருகிறார்கள். அதிகமானவேலையின்மீது போகும் காலமும் விசேஷ உத்திரவினால் விலக்கப்படும் காலமுந்தவிர மற்றக்காலங்களில் ஒவ்வொருவரும் ஒரு குள்ளத்தடியைத் தரிக்கவேண்டும். சிறைச்சாலை காக்கிற கான்ஸ்டபில்கள்மாத்திரம் கத்தியுங்கையுமாய் நிற்கிறார்கள். இன்ஸ்பெக்டர்களும் ஒரேவிதமான குறியுடையவர்கள்தாம். புதிதாய்ப் போலீசில் சேருபவர்களைப் படிப்பிப்பதற்காக ஒவ்வொருஜில்லாவின் பிரதான ஸ்தலத்திலும் ஒரு பள்ளிக்கூடம் ஏற்படுத்தியிருக்கிறது. அதன் விசாரணைக்காக ஒரு இன்ஸ்பெக்டராயாவது ஒரு தலைமையானகான்ஸ்டபிலையாவது நியமித்திருக்கிறது. அநேகமாய் எல்லாவிடங்களிலும் போ

லீசு ஸ்டேஷனுக்கு அருகாமையில் துரைத்தனத்தாரே செலவுசெய்து வீடுகள் வரிசையாகக் கட்டியிருக்கிறார்கள். கான்ஸ்டபில்களும் ஹெட்கான்ஸ்டபில்களும் ஆகிய தாழ்ந்த உத்தியோகஸ்தர்கள் அந்த வீடுகளிலேயே குடியிருக்கவேண்டும். ஏனென்றால் அவர்கள் கிரமமாகச் செய்யவேண்டிய வேலைக்கும் திடீரென்று நேரும்வேலைக்கும் கையின்கீழ்ச் சித்தமாயிருக்க இசைந்திருப்பதுமன்றி அவரவர் போக்குப்படி போகவொட்டாமல் ஒரேவித நல்லசிட்சையில்பழக்கிக் கண்காணித்துக்கொள்ளச் சுலபமாயுமிருக்கும். அவ்வீடுகளை அப்போதைக்கப்போது பழுதுபார்ப்பதற்காகக் குடிக்கூலிமாத்திரம் அவர்களிடத்தில் வாங்கப்பட்டுவருகிறது. ஜில்லா சூபரின்டாண்டினுடைய தெளிவான அனுமதியின்றிப் போலீசு உத்தியோகஸ்தர்கள் எந்தக்காலத்திலும் எக்காரணத்தைப்பற்றியும், நேராகவாகிலும் மறைவாகவாகிலும் எவ்வித வெகுமானமும் எவ்வித பிரதிபிரயோஜனமும் வாங்கவும் கூடாது, பெறவுங்கூடாது. போலீசாருடைய முதன்மையான கடமை குற்றங்கள் கலகங்கள் நடவாமல் ஜாக்கிரதையாக இருப்பது என்று முதலில் கூறினோம். இன்னும் அவர்கள் செய்கிறவேலைகள் என்னவென்றால், குற்றம் நடந்தால் அதன் வரலாற்றையறிந்து குற்றவாளிகளைக் கண்டுபிடித்துக் கொண்டுவருவது, போனசொத்தைக் கண்டுபிடிப்பது, பெருங்குற்றம் சாட்டப்படுகிறவர்கள்பேரில் சாட்சியம் சேகரித்து அவர்களை நியாயஸ்தலங்களில் நியாயம் அடைவிப்பது, துன்மார்க்க நடையுள்ளவர்கள் பேரிலும் அனுமானம் தங்கியவர்கள்பேரிலும் கண்ணோக்கமாயிருந்து பிடிப்பது, கிராமங்களிலும் ராஜமார்க்கங்களிலும் உலாவிப் பாதுகாப்பது, பிரஜைகள் அசுசியும் அவலட்சணமுமான செய்கைகளைச் செய்யவொட்டாமல் தடுப்பது, பகிரங்கமான குற்றம் நடப்பதைப் பற்றி நியாயாதிபதிக்குத் தெரிவிப்பது, நிறுத்தல் அளவை முகத்தல் அளவைகளைப் பரிசோதிப்பது, துரைத்தனத்தாருடைய மாட்டுப்பட்டிகளைப் பார்ப்பது, கிரிமினல் சம்பந்தமான கட்டளைகளை நிறைவேற்றுவது, துரைத்தனத்தாருடைய பொக்கிஷங்களைக்காத்து அவைகளை ஓரிடத்திலிருந்து ஓரிடத்திற்குக் கொண்டுபோகும்போதும் வரும்போதும்கூட இருந்து ரக்ஷிப்பது, சீர தண்டனையடைந்தவர்கள் வெளியில் போகவர மெய்க்காவல்காப்பது, அங்கங்கே என்னென்ன விசேஷங்கள் நடந்தாலும் விவரமாய் அறிந்து அன்றுடம் அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தும்பொருட்டு நாட்டின் ஒவ்வோரிடத்திலும் கவனமாயிருப்பது முதலியவேலைகளும் போலீசாரைப்பொறுத்தவை. அன்றியும் சிறைச்சாலைகளைக் காப்பதும், அன்னியதேசங்களுக்குக் கள்ளச்சரக்குகள் ஏற்றுமதி இறக்குமதியாகாமல் தடுப்பதும், மதுபானம் இறக்கும் கலால் வியாபாரச் சாலைகளில் சூதுநடவாமல் பார்ப்பதும், கப்பல் வர்த்தகத்துக்கு இடையூறு உண்டாகாமல் பார்த்துக்கொள்வதும், முனிசிபல்

ஆக்ட்டு கண்டோன்மெண்டு ஆக்ட்டுமுதலிய சட்டங்களில் இட்ட வேலேகளேக் கவனிப்பதும் அவர்களுடையகடமையே. முன்னே மதராஸ் போர்ச்சேவகர்கள் காத்திருந்த ராஜ்ஜியத்தின் எல்லேஸ்தலங்களேயும் போலீசார் காத்துவருகிருர்கள்.

குற்றவாளிகளேக் கண்டுபிடிப்பதற்கென்று பிரத்தியேகமாக உத்தியோகஸ்தர்கள் கிடையாது. அவ்வவ்விடத்திய போலீசார் குற்றம் நடந்தால் அதனுடைய உண்மைகளேக் கண்டுபிடிக்க முடியாமற்போனல் பெருங்குற்றமாயிருக்குமாயின் தேறின சாமர்த்தியமுள்ள பெரிய உத்தியோகஸ்தர்களே அனுப்பி அக்குற்றம் நடந்த விவரத்தை அறியும்படி அனுப்புவதுண்டு. கொள்ளேயடிப்பவர்கள் என்று நிச்சயமாகத் தெரிந்த ஆசாமிகளேயும் வயிற்றுக்கில்லாமல் ஏதாவது அகப்படாதா என்று திரியும் கூட்டத்தார்களேயும் மற்றப்படி குற்றஞ்செய்யத்தகுந்த பேர்வழிகளேயும் இன்னுர் இன்னுர் என்று விவரமாய்க் குறிப்புகள் எழுதி அங்கங்கே வைத்திருக்கிறபடியால் குற்றம் நடந்தவுடனே கண்டுபிடிக்கச் சௌக்கியமாயிருக்கிறது. கிராமக்காவற்காரரும் ஒத்தாசைசெய்வார்கள். யாரையாவது விசாரிக்கவேண்டுமாளுல் அவர்களேப் போலீசு ஸ்டேஷனுக்கு அழைப்பியாமலே கூடியவரையில் அந்தந்த ஸ்தலங்களிலேயே போய் விசாரிக்கிருர்கள். குற்றஞ்சாட்டப்பட்டவன் குற்றஞ் செய்தது உண்டென்று பலவந்தமின்றித் தாளுகவே ஒப்புக்கொண்டாலும் அதன் பலத்தைக்கொண்டே அவன்பேரில் குற்றத்தைச் சுமத்தக்கூடாதென்று போலீசாருக்குத் திட்டமிட்டிருக்கிறது. அப்படி ஒப்புக்கொள்வானேயாகில், அதை அனுசரித்து அதை ஸ்திரப்படுத்தும் வேறுசாட்சியம் உண்டாவென்றுமாத்திரம் தேடலாம். பரிதானம் வாங்கினுலும் பணம்பிடுங்குவதற்காக ஸ்டேஷனில் அக்கிரமமாய் அடைத்துவைத்தாலும் போலீசாருக்குத் தண்டனே உண்டு. அப்படி போலீசார் கொடுமைசெய்வார்களாயின் அதை வெளிக்குக் கொண்டுவருவதுதான் ஜனங்களுக்கு க்ஷேமம்.

இவ்வாறு போலீசாருடைய அக்கிரமங்களே வெளிப்படுத்தும்படியான தைரியமுள்ளவர்கள் வெகுவாய் இல்லே. ஏதோ ராஜாங்கத்தாருடைய வேலேகளுக்காகப் போலீசாரை ஏற்படுத்தியிருக்கிறதென்று ஜனங்கள் சாதாரணமாய் எண்ணுகிருர்களே அவ்வெண்ணத்தை மாற்றி தங்களுடைய க்ஷேமத்துக்காக, போலீசாரை வைத்திருக்கிறதென்று நம்பும்படியாகச் செய்வது அவசியம். ஆயினும் இந்த நம்பிக்கை யுண்டாகச்செய்வது வருத்தமாயிருக்கிறது. ஏனெனில், ஜனங்களிடத்தில் கான்ஸ்டபில்கள் அதிகமாய்ப் பழகிக்கொண்டிருப்பார்களேயாகில் தங்களுக்கு ஹிதம் செய்பவர்களென்று ஒருவேளே ஜனங்களுக்குத் தோன்றும். அப்படிப் பழக கான்ஸ்டபில்கள் போராது. சராசரி கணக்குப்பார்த்தால் இந்த சென்னே ராஜதானியில் 1,500 ஜனங்களுக்கு ஒரு கான்ஸ்டபில் விழுக்காடு

தேறும். ஆகையால் முக்கியமாய் நாட்டுப்புறங்களில் ஜனங்கள் கண்ணில் கான்ஸ்டபில் தென்படுவதே அருமையாகத்தான் இருக்கவேண்டுமல்லவா? காண்பதே அரிதாயிருக்கிற இந்தக்கான்ஸ்டபில் தங்களுடைய பத்திரத்துக்குக் குறைவுவராமலும் தீங்குசம்பவிக்காமலும் பாதுகாப்பதற்காகத்தான் நியமிக்கப்பட்ட உத்தியோகஸ்தன் என்று ஜனங்கள் புத்தியில் எப்படிதோன்றும்? ஆயினும் யோசிக்குமிடத்து போலீசாருடைய அதிகாரமெல்லாம் ஜனங்களுக்குள்ளேயே ஒருவர்க்கொருவர் செய்யும் தீமைகளை விலக்குதற்காக ஏற்பட்டிருக்கிறதேயல்லாமல், துரைத்தனத்தாருக்காக ஜனங்கள் மீது செலுத்துவதற்காக அன்று. எங்கே ஜனங்களுக்கு ஹிம்சிக்கும் கருவியாகாமல் ரக்ஷிக்கும் கருவியாகப் போலீசார் நடக்கின்றனரோ அங்கே எல்லா நன்மைகளும் உண்டாகுமென்று எதிர்பார்க்கலாம்.

ரஸவாதமென்னும் பித்தலாட்டம்.

ரஸவாதம்செய்து செம்பு இரும்புமுதலிய அற்பலோகங்களைப் பொன்னாக்குவது என்றுசொல்லிப் பேராசைகாட்டி உலகத்தாரை ஏமாற்றிக்கொண்டு திரிகின்றவர்கள் இக்காலத்தில்மாத்திரமேயல்ல, முற்காலத்திலும் பலருண்டு. ஆயினும் வாதமென்பது முற்றும் பொய்யென நினைக்கக்கூடாது; கடவுளுடைய படைப்பிலுள்ள பல புதுமைகளுள் இதுவும் ஒன்றாயிருக்கக்கூடுமல்லவா? எல்லாம் வல்ல கடவுளுக்கு எதுதான் அசாத்தியமானது; கரும்பொன்னைச் செம்பொன்னாக மாற்றவல்ல சில மூலிகைகளைக் கடவுள் சிருஷ்டித்திருக்கலாகாதா? சிருஷ்டித்தேயிருக்கலாம். ஆயினும் அதைத் தெரிந்துகொண்டவரேயில்லையோ, தெரிந்துகொண்ட யாரோ சில யோகிகள் அதனுண்மையை வெளியிடுவதில்லையோ, யாதுகாரணமோ அது ஒருவர்க்கும் பயன்படவில்லை. "இல்லாமற்பிறவாது, அள்ளாமற்குறையாது" என்ற உலகவழக்கப்படி, ரஸவாதம் என்னும்சொல் ஆதிகாலந்தொட்டு உலகத்தில் வழங்கிவருவதால் அதன் பொருள் ஒன்று இருக்கவேண்டுமென்று ஊகித்தறிந்துகொள்ளலாம். ஆனால், செம்புமுதலியவற்றைப் பொன்னாக்க வல்ல மூலிகை ஒன்று இருக்கும்பக்ஷத்தில் அது ஏன் பலவிடங்களிலும் இருக்கக்கூடாது; பதார்த்தசோதனை செய்பவர்களுக்கு அது ஏன் கிடைக்கக்கூடாது? ஆதலால் அப்படிப்பட்ட பொருளொன்று கிடைக்கவேகிடையாது என்று சிலர் ஆக்ஷேபிக்கலாம். ஆயினும் அதற்கேற்ற ஸமாதானமும் அவர்களே எளிதில் தெரிந்துகொள்ளக்கூடும்: இரும்புமுதலிய லோகங்கள் எங்கும் மிகுதியாய்க்

கிடைக்கின்றனவே; அவற்றைப்போலப் பொன் ஏன் மிகுதியாய்க் கிடைக்காமல் வெகு அருமையாயிருக்கின்றது? பொன் மிகவும் உத்தமமான லோகமென்று இயற்கையாகவே அத்தனை அருமையாய்ப் படைத்த கடவுள் செயற்கைமுறையால் மிகுதியாகச் சமைத்துக் கொள்ளும்படி அமைத்திருப்பாரா? ஆதலால் நமக்கு வாய்க்காமையாலேயே ரஸவாதம் பொய்யெனத் துணிந்துசொல்வது சரியன்று; ஏதோ ஒரு பக்ஷத்தில் அது இருந்தாலும் இருக்கலாம்.

அது எப்படியிருந்தாலும் அதன் உண்மை இத்தன்மையதெனத் தெரிந்துகொள்ளாமல், வீணேவாதம் செய்பவரெனப் பெயரிட்டுக்கொண்டு உலகத்தாரை மோசஞ்செய்யப் பலர் ஏற்பட்டிருக்கிறார்கள். அவர்கள் செய்யும் வீண் ஆடம்பரமான அஸ்தலாகவங்களைக்கண்டு ஒன்றுமறியாத பாமர ஜனங்கள்மாத்திரமேயன்றி நன்றாய்ப் படித்துத்தேறின பண்டிதர்களும் மயங்கி, தாம் ஒருமிக்க குபேரனாகிவிடலாமென்று பேராசைகொண்டு அவர் சொல்வது மெய்தானென்று நம்பித் தமது கையிலுள்ள பொருளையுமிழந்து, வாய்த்தவிடும்போய் அடுப்பு நெருப்பும் அவிந்துபோனதுபோல அல்லாடுகின்றனர். இதற்குத் திருஷ்டாந்தம் இக்காலத்திலே நமது கண்ணெதிரில் எத்தனையோ கண்டிருக்கிறோம். பொருளாசை யாரைவிட்டது, பணமென்றால் பிணமும் வாயைத்திறக்கும் என்கிறார்களல்லவா? ரஸவாதியென்று பெயரிட்டுக்கொண்டு வெளியே திரிகின்றவன், தன் வசத்துக்கு உட்படுகிறவனென்று தோன்றுகிற ஒருவனிடம்போய் முதலில் எனக்கு ஒருகவளம் சோறு அளிப்பாயானால் உனக்குக் கோடிபொன் செய்துகொடுக்கிறேன் என்று சொல்லுகிறான். அவன் பேச்சு என்றைக்காவது உண்மையாகுமா? அவ்வளவு பொன் சமைக்கவல்லவன் ஒருகவளம் சோற்றுக்கு அல்லாடுவானேன்? ஆகையால் இத்தன்மையான வஞ்சகர்களுடைய பேச்சைக்கேட்டு மோசம்போகாதிருங்கள்.

இவ்வாறு ரஸவாதிகளென்று வேஷம்போட்டுக்கொண்டு திரிகின்றவர்களும், அவர்கள் பேச்சைக்கேட்டுப் பேராசைகொண்டு ஏமாறுகின்றவர்களும் நமது தேசத்தில்மாத்திரமேயல்ல; ஐரோப்பாமுதலிய தேசங்களிலும் நெடுநாளாக விசேஷமாயுண்டு. சிலர் ரஸவாதத்திலுள்ள ஏதோ ஒரு நுட்பத்தைத் தெரிந்துகொண்டு தாம் அதைக் கண்டறியவேண்டுமென்று தம் வாழ்நாள்முழுதும் அந்த முயற்சியிலேயே ஒழித்துவிடுகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் பிறரை மோசம்செய்பவர்களல்ல; தம்மைத்தாமே மோசம்செய்துகொள்கின்றவர்கள். ஆயினும், முயற்சி மெய்வருந்தக் கூலிதரும் என்பதைப்பற்றி முன்னேரிடத்தில் கூறியிருக்கின்றோமாகையால், அதன்படியே அவர்கள் முயற்சி முற்றும் முடிவுபெறாமற் போனாலும், உழைப்புக்குத் தக்க அளவு ஊதியம் கிடைக்காமற் போவதில்லை; அப்படி உழைப்பவர் ஏதோ ஒருவகையில் தேர்ச்சி

பெறுகின்றனர். வெகுவாய் வயித்தியத்தில் தேறுவதுண்டு; ஆனது பற்றியே "வாதிகெட்டால் வயித்தியனுவன்" என நெடுநாளாய்ப் பெரியோர் வழங்குகின்றனர். இவ்வண்ணமே ஐரோப்பாவில் ஏறக்குறைய 200 வருஷங்களுக்குமுன் வாதம் செய்யப்புகுந்த ஒருவன் அத்தொழிலில் சித்திபெருமல் பல தொல்லைகள் அனுபவித்து கடைசியில் பீங்கான்செய்யும் உபாயத்தைக் கண்டறிந்தானெனக் கேள்வியுற்றிருக்கிறோம். அதன் வரலாற்றைச் சுருக்கமாய் அடியில் எழுதுவோம்.

ஐரோப்பாவிலே ஜர்மனிதேசத்தில் பர்லின்நகரத்துக்கு அருகிலுள்ள ஷிலீஸ் என்னும் கிராமத்தில் இருநூறு வருஷங்களுக்கு முன்னே பாட்கர் என்று ஒருவனிருந்தான்.

பன்னிரண்டுவயதில் அவன் பெர்லின் நகரத்தில் மருந்துவகை செய்துவிற்கும் ஒருவனிடத்தில் தொழில்பழக அமர்ந்தான். அவனுக்கு இளமையிலேயே ரஸாயனவித்தையில் அதிக வாஞ்சை உண்டெனத் தோன்றுகிறது. ஏனென்றால் அவனுக்கு அவகாசம் காணுந்தோறும் அவன் ரஸாயன பரீக்ஷைசெய்துகொண்டுவருவான். அப்பரீக்ஷைகளில் பெரும்பாலவை ரஸவாதம் ஒன்றையே சார்ந்தவைகள். சில வருஷகாலம் சென்றதன்மேல் லோஹவர்க்கம் அனைத்தையும் கரைக்கத்தக்க பொருள் ஒன்றைக் கண்டுபிடித்ததாகவும், அதன் உதவியால் பொன் உண்டாக்க வகை அறிந்ததாகவும் பாட்கர் வீம்புக்குச் சொன்னுன். அந்தப் பொருள் இன்னின்ன அதிசயங்களைச் செய்யவல்லதென்று அவன் தனக்கு மருந்துசெய்யும் முறை கற்பித்த ஜார்ன் என்பவருக்குப் பரீக்ஷைசெய்து காட்டினுன். அவன் கரும்பொன்னைச் செம்பொன் ஆக்கினுனென்று அந்த உபாத்தியாயரும் பிறரும் நெஞ்சார நம்பத்தக்கதாக அவன் ஏதோ ஒரு சூது காட்டினுன்.

ஒருவரிடத்தில் அமர்ந்து மருந்துசெய்யப் பழகின வித்தியார்த்தி ரஸவாதத்தினது நுட்பத்தைக் கண்டறிந்தானென்று ஊரெங்கும் வதந்திபிறந்து உலாவியது. பொன் சமைப்பவனுகிய அவ்வற்புத வாலிபனைக் கண்களிகூரக் காணும் ஆசையால் மருந்துக்கடையில் கும்பு திரளாய்க் கூடிற்று. அவனைக் கண்டு பேசும் விருப்பத்தை அரசரும் வெளியிட்டார். செம்பைப் பொன்னுக்கிய துண்டென்று ஒரு துண்டை அரசருக்குக் காணிக்கையாய்க் கொண்டுபோய்க் கொடுத்தபொழுது, அவர் இனி நமக்கு என்னகுறைவு வரப்போகின்றது; மனம் தெவிட்டுமளவும் பொன்னை எளிதில் செய்வித்துக்கொள்ளலாம் என்று எண்ணி நெஞ்சம் பூரித்து, பாட்கரை வசப்படுத்தி அரணுன ஸ்பாண்டௌ கோட்டைக்குள் அவனைவைத்துப் பொன் செய்விக்க நிர்ணயித்தார். அப்பொழுது ப்ருஷியா துரைத்தனத்தார் செலவிற்குத் திரவியம் கிடைக்காமல் மெத்தவும் முட்டுப்பட்டார்கள். அரசன் அபிப்பி

ராயத்தை அவ்வாலிபன் அறிந்து தன் சூது வெளிப்படப்போ கிறதென்று அஞ்சிக் கண்ணுக்கு எட்டாத தூரத்தில் ஓடிப்பிழைக் கத் தீர்மானித்து, அந்நாட்டு எல்லையைத் தாண்டி ஸாக்ஸனிக் குப் போய்த் தப்பித்துக்கொண்டான்.

பாட்கரைக் கண்டுபிடித்து ஒப்புவிப்பவர்க்கு ஆயிரம் தாலர் வெகுமதி கொடுப்பதாக விளம்பரம் பிறந்தது. அப்போதும் அவன் அகப்படவில்லை. அவன் உவிற்றென்பர்க்கில் போய்ச்சேர்ந்து ஸாக் ஸனி இலெக்டர் எனும் மன்னனிடத்தில் அடைக்கலம் புகுந்தான். அம்மன்னன் வலியுடையோன் என மறுநாமம் தரித்த போலன்ட் அரசனாகிய 1-வது ப்ரெட்ரிக் அகஸ்தஸ். அச்சமயத்தில் அந்த ப்ரெட்ரிக்கும் செலவிற்குப் பணம் அகப்படாமல் தட்டுக்கெட் டிருந்தான். ஆனதன்மையால், ரசவாதசூக்ஷ்மம் கண்ட அவ்வா லிபனைத் துணைக்கொண்டு வேண்டுமளவிற்குப் பொன் செய்து கொள்ளச் சமயம் கிட்டியதை நினைத்து மகிழ்ந்து, தன் சேவகரை அனுப்பி, பாட்கரை அந்தரங்கமாய் ட்ரெஸ்டெனுக்கு வரவழைத் தான். பாட்கர் உவிற்றென்பர்க்கைவிட்டுப் புறப்படவும் புரு ஷியாதேசத்துக் காலாட்சேவகர் வாசலில் நெருங்கி அந்த ரஸவாதி யைத் தங்கள்வசம் ஒப்புவித்திடக் கேட்டார்கள். ஆனால் சமயம் முந்திப் போயிற்று. பாட்கர் அதற்குள்ளே ட்ரெஸ்டெனில் போய்ச் சேர்ந்து செம்பொன் மாளிகையில் இருக்க இடம்பெற்றான். அங்கு அவ்வாலிபனுக்கு எவ்வித உபசாரமும் நடந்ததெனினும், அவ னைத் தப்பவிடாமல் கட்டுக்காவல் செய்தார்கள்.

அப்பொழுது போலாந்தில் அராசகம் மேற்கொண்டிருந்தது பற்றி அரசன் பாட்கரை அரண்மனையில் நிறுத்திவிட்டு, சிறிது காலம் வெளியே சென்று திரும்பிவர நினைத்துப் போலாந்துக்குப் போய்விட்டான். போய் உவார்ஸா ராஜதானியில் சேர்ந்திருக்கை யில் பொன்செய்யும் வகை அறிய அவன் மனம் பதைத்துப் பிறர் உதவியின்றித் தானாகவே எந்த லோகத்தையும் பொன்னாக்கிக்கொ ள்ளும்படி அந்த நுட்பத்தைத் தனக்கு வெளியிட பாட்கருக்குக் கடிதம் எழுதிக்கேட்டான். இப்படி அரசன் நெருக்கிக் கேட்டத னால், அந்த ரஸவாதி சிறு குப்பியில் ஏதோ ஒரு சிவப்பான திரா வகம்விட்டு அடைத்து அனுப்பி, இரும்பு செம்புமுதலிய எந்த லோகத்தையும் உருக்கி அந்தத்திராவகத்தில் ஒரு துளி விட்டால், உடனே அது பொன்னாகுமென்று கடிதமூலமாய்த் தெரிவித்தான். குப்பிகண்டவுடன் அரசன் பரீக்ஷைபார்க்கத் தீர்மானித்து, தானும் குமாரனும் அரண்மனையில் அந்தரங்கமான ஓர் அறைக்குள் பிரவே சித்துக் கதவைப் பூட்டிப்போட்டுத் தாமே சொர்ணபாகம் செய் வதற்கு இடுப்பில் தூசி தாங்கும் தோல் கட்டிக்கொண்டு மூசை யில் செம்புவைத்து உருக்கி, பாட்கர் அனுப்பிய திரவத்திற் சிறிது ஊற்றினார்கள்; பரீக்ஷை வாய்க்கவில்லை. பின்னும் ஊற்றி

நன்றாய்க் கலந்துபார்த்தார்கள், பிரயோஜனப்படவில்லை; என்ன பக்குவம் செய்தும் செம்பு செம்பாகவே இருந்தது. அரசன் ரஸவாதி எழுதி அனுப்பிய முறையைக் கூர்மையாய்ப் பார்வை யிட்டான். அதில் நாடிய கருமம் கைகூடவேண்டில், அந்தத் திரவத்தை மெத்தவும் சித்த சுத்தியாய் விடவேண்டுமென்று எழு தியிருந்தது. அன்று மாலைவேளையில் அரசன் தகாதவர்களுடன் சக வாசஞ்செய்ததை நினைந்து அதுதான் பரீக்ஷை தவறியதற்கு நிமித்த மென்று எண்ணி, மறு பரீக்ஷை செய்துபார்த்தான்; அதுவும் வாய்க் கவில்லை. அரசனுக்கு அப்பொழுது மிகுந்தகோபம் உண்டாயிற்று; இரண்டாவது பரீக்ஷைதொடங்குமுன் குரு முன்னிலையில் பாவ அறிக்கைசெய்து மன்னிப்புப்பெற்றுப் பின்பு பரீக்ஷைசெய்தான். அவ்வாறுசெய்தும் கருமம் சிதறியதினாலே அரசனுக்குக் கோபாக் கினிபற்றி எரிந்தது.

பணமுட்டு வரவா அதிகரித்து அதைத் தீர்க்க வகை ஒன்றும் தோன்றாததனால் பொன்செய்யும் நுட்பத்தை பாட்கர் வாக்கி னின்று பலாத்காரமாய் வெளியிடுவிக்க அரசன் தீர்மானித்தான். அந்த ரசவாதியோ அரசன் அபிப்பிராயத்தைக் கேள்வியுற்று மீளவும் அங்கிருந்து ஒளித்தோட நிர்ணயித்து, காவற்சேவகர் கண்காணாமல் நழுவி வெளிப்பட்டு, இராப்பகல் மூன்று நாள் ஓய்வறநடந்து ஔஸ்திரியாவைச் சேர்ந்த என்ஸ் எனும் ஊர்போ ய்ச் சேர்ந்து அங்கு அச்சம் இல்லையென்று இருந்தான். ராமேசுவரம் போயும் சனீச்வரன் அவனை விடவில்லை. அரசன் அவனைப் பிடித்து வர அனுப்பிய தூதர் பொன்மானை வால்பிடி தோள்பிடியாகத் தொ டரும் வேட்டைநாய்களைப்போலத் தொடர்ந்து அடிபிடித்துப் போய் முற்றுகைசெய்து படுத்தபடுக்கையில் விழுந்து அமர்த்தி னார்கள். அவர்கள் கையினின்றும் தப்பிக்கொள்ளும்படி அவன் தன்னால் ஆமளவிற்குத் திமிறிப்பார்த்தான்; சமயத்தில் தன்னைத் தப்புவித்து உதவும்படி ஔஸ்திரியா துரைத்தனத்தாரையும் கெஞ் சிக் கேட்டான்; அவன் சாமர்த்தியம் ஒன்றும் பலிக்கவில்லை. அவர்கள் அவனைக் கைநெகிழவிடாமல் பிடித்த பிடியாய் ட்ரெஸ் டென்பட்டணத்தில் கொண்டுபோய்ச் சேர்த்து, அங்கே சேர்ந்த நாள்முதலாக முன்னிலும் அதிக ஜாக்கிரதையாய்க் கட்டுக்காவல் செய்தார்கள். சிறிது காலத்திற்குள் அவனை அங்கிருந்து கொண்டு போய் அரணான கனிங்ஸ்தீன்கோட்டையில் வைத்தார்கள். அங்கிருக்கையில், ராஜாவின் தனசாலையில் பணம் கட்டோடே இல்லையென்றும், நெடுநாள்வரையில் சம்பளம் நிலுவையாயிருக் கும் பத்துப் போலாந்தியர்பட்டாளத்தாருக்குச் சம்பளம் கொடுக்க நீ பொன் செய்துதந்தாலன்றி வேறுவகை இல்லையென்றும் அவ னுக்கு அறிக்கைசெய்யப்பட்டது. ஒரு நாள் அரசன் தானே சிறைச்சாலைக்குப் போய் பாட்கரைக் கண்டு, இந்தக்ஷணமே நீ பொன்

செய்யத் தொடங்கவேண்டும்; இல்லாவிடில் தூக்கிற்போடப்படு வாய் எனக் கொரேமாய்ச் சொன்னான்.

அரசன் அவ்வாறு சொல்லி ஐந்தாறு வருஷம் சென்றும் பாட்கர் பொன் செய்யவுமில்லை, அரசன் கற்பனைப்படி தூக்கிடப் படவுமில்லை. ஏன்—ஏனெனில், செம்பைப் பொன்னாக்குவதிலும் களிமண்ணைப் பீங்கானாக்குவது பெரிய வித்தையல்லவா? இவ்வ ரிய வித்தையைக் கண்டறிய இருந்த அவனைத் தூக்கிற்போட் டால் இவ்வித்தை வெளிவருவது மற்றெவர்மூலமாய்? விந்தை யான வேலைப்பாடுள்ள பீங்கான் சில சீனாவிலிருந்து போர்த்யு கல்தேசத்தார் சீமைக்குக் கொண்டுபோய், எடைக்கு எடையி லும் அதிகமான பொன்னுக்கு விற்றார்கள். ஆதியில் பாட்கர் பீங் கானைக்குறித்து நினைக்க நேர்ந்தது திர்ஷ்டியந்திரம் நிர்மிப்பவனும் இரசவாதியுமாகிய உவால்த்தர் வன் ஷிர்நாஸ் என்பவனால். அவன் கல்வித்தெளிவும் பெருந்தகைமையுமுள்ளவன்; பர்ஸ்டென்பர்க் எனும் ராஜகுமாரனும் ராஜனும் அவன் மிக்க நன்குமதிக்கப் பெற்றிருந்தான். இது இப்படியிருக்க, பாட்கர் எத்தனை நாட் செல்லினும் தூக்குமரமே தன் பங்கென்று ஏக்கம்பிடித்திருந்ததை அறிந்து, ஷிர்நாஸ் "பொன்செய்ய உன்னால் ஆகாதானால், மற் றேதாயினும் ஒன்றை வருந்தி வகை அறிந்து செய்யலாமே; பீங் கான் செய்" என்று அவனுக்குச் சமயோசிதமான உபாயம் சொல் லிக்கொடுத்தான்.

ரசவாதியென்று பெயரெடுத்து ஏமாறிப்போன பாட்கர் இந்தக் குறிப்பைச் சிந்தையிற்கொண்டு அன்றுதொட்டு அல்லும் பக லும் அலுப்பற உழைத்துப் பரீட்சைசெய்துவந்தான். பீங்கான் செய்யும் முறை அறி தொழிலில் நெடுநாள் இளைக்காமல் முயன் றும் அவன் கருமம் வாய்க்கவில்லை. இப்படியிருக்கையில் ஒரு நாள் குகைசெய்யத் தருவித்த செங்களிமண்ணின் துணையால் அவன் காரியம் கைகூடும் துறையில் சேர்ந்தான். அதிக சூடு ஏற்ற, அந்தக் களிமண் தன் உரு மாறாமல் பளிங்காய்ப்போயிற்று. உடைத்துப்பார்க்க அது உறுப்பு அமைதியில் பீங்கானைப்போன் றிருந்தும், வர்ணத்திலும் உருவொளியற்ற தன்மையிலும் மண் ணாகவே இருந்தது. இப்படி அவன் செம்பீங்கான் வனையும் முறையைத் தற்செயலாய்க் கண்டறிந்து வனைந்து விற்றுக்கொ ண்டுவந்தான்.

பாட்கர் வனைந்து விற்றது செம்பீங்கான். நாணயமான பீங் கானுக்கு உரிய வர்ணம் செம்மை அல்ல, வெண்மையென்று அவனுக்கு நன்றாகத் தெரிந்ததுபற்றி வெள்ளைப்பீங்கான் செய்யும் சூக்ஷமம் அறியப் பலவாறு பரிசோதனை செய்துபார்த்தான். இந்த முயற்சியில் எத்தனையோ வருஷம் சென்றும் அவன் சித்தி காண வில்லை. கடைசியில் "அகதிக்கு ஆகாயமே துணை." என்றபடி

முன்போலத் தெய்வமே அவனுக்கு உபகாரியாகி வெள்ளைப்பீங்கான் வனையும் உபாயத்தைக் கண்டறியும்படி உதவிற்று. 1707-ம் வருஷம் ஒருநாள் தன்னுடைய பொய்மயிர் ஆச்சரியமான விதமாய்க் கனத்தது கண்டு இந்த விபரீதத்திற்கு ஏது என்னவென்று அவன் வேலைக்காரனைக் கேட்டான். பரிமளத்திற்காகத் தூவிய பொடியினால் மயிர் இப்படிக் கனக்கிறதென்று வேலைக்காரன் மறுமொழி பகர்ந்தான். அக்காலத்தில் மயிருக்கு இடும் பரிமள பஸ்பமாக வழங்கியது ஒருவித மண். வேலைக்காரன் இந்த மறுமொழி சொல்லவும், நுட்பபுத்தியுள்ள பாட்கருக்குச் சூக்ஷமம் தெரிந்தது. நான் கண்டறிய நாடுவது இவ்வெண் மண்பொடி ஆனாலும் ஆகுமே—எப்படியும் அது இன்னதென்று உறுதி அறிய வாய்த்த இவ்வருஞ்சமயத்தைக் கைநெகிழ விடலாகாது என்று அவன் வெகு ஜாக்கிரதையாக வருந்தி உழைத்தான். உழைத்த உழைப்பு வியர்த்தமாய்ப் போகவில்லை. உழைப்பிற்குத் தக்க ஊதியம் கிடைத்தது. பரீக்ஷைசெய்து பார்த்த அளவில் மேற்குறித்த கந்தப்பொடியில் சேரும் திரவியங்களிற் பிரதான திரவியம் கோயலின் (Kaolin) எனத் தெரியவந்தது. அது இல்லாத குறைதான் இத்தனை காலம் அவன் நாடிய கருமம் கைகூடுதற்குப் பெருந்தடையாயிருந்தது.

இந்த மர்மம் கண்ட பாட்கர் என்ன சாமானியனா—விசேஷமான தேர்ச்சியுள்ளவன். அத்தகைமையுள்ள அவன் இதைக் கண்டதனால் விளைந்த பெருஞ்சித்தி ஒன்றல்ல—பல. 1707-ம் வருஷம் அக்டோபர்மாசம் அவன் முதல் முதல் வனைந்த பீங்கானை அரசனுக்குக் காணிக்கையாக அளித்தான். அதைக் காண அரசனுக்கு அதிக ஆனந்தமாயிருந்தது. பாட்கர் இவ்வாறு அரைகுறையாய்க் கண்டறிந்த முறையை முற்ற முடியக் காணும்படி அவனுக்கு வேண்டும் சகாயம் செய்வதாக அரசனும் வாக்கு அளித்தான். இத்தொழிலில் கைதேர்ந்த ஒருவனை டெல்ப்ட் நகரத்தினின்று வரவழைத்து வேலைதொடங்கி, பாட்கர் வளமுறப் பீங்கான் வனைந்தான். ஆனதுபற்றி, ரசவாத முயற்சியைக் கட்டோடே கைவிட்டு அவன் மட்கலம் வனைதொழில்செய்து ஜீவனம்பண்ணலானான். அவன் தொழிற்சாலை வாசலில் "எல்லாம் வல்ல ஈசன் யாவையும் படைத்த பகவன் வாதியைக் குலாலனாக்கினர்" எனச் சிலையில் அறிக்கை செதுக்குவித்து வைத்தான்.

பாட்கர்பெயரில் அரசனுக்கு இன்னம் அதிகமாக விசுவாசம் உண்டாகவில்லை. அவன் அறிந்த அந்தரங்கத்தைப் பிறருக்குச் சொல்வானென்றும், தன் வசத்தினின்று ஓடிப்போவானென்றும் அரசன் முன்போல் அவனைக் கட்டுக்காவல் செய்வித்தான். அவனுக்கு நூதனமாகக் கட்டுவித்துக் கொடுத்த தொழிற்சாலைகளுக்கும் சூளைகளுக்குங்கூட ராணுவ சேவகரைக் காவல்வைத்தான்.

அன்றியும் அந்தக் குலாலனைத் தப்பவிடாமல் காத்துக்கொள்ளும் பாரத்தை மேலான ராணுவ உத்தியோகஸ்தர்கள் ஆறுபேர்மீது சுமத்திவைத்தான்.

அப்பால் நூதனமாக ஏற்பட்ட சூளைகளில் பாட்கர் செய்த பரீட்சைகள் நன்றாக வாய்த்தன. அவன் வனைந்த பீங்கானை நாணயமானதென்று பலர் விலை ஏறக்கொடுத்து வாங்கினார்கள். அது கண்டு, அரசன் பீங்கான் வனைதொழிற்சாலை ஒன்று ஸ்தாபிக்கத் தீர்மானித்தான். டெல்ப்ட் நகரத்தில் பீங்கான்வேலை நடந்தது பற்றி உலாந்தாதேசத்தில் செல்வம் பெருகியது லோகப்பிரசித்தந்தானே, நானும் அவ்வாறே பீங்கான் செய்து பெருஞ்செல்வம் பெற்றாலென்ன? என்று எண்ணமிட்டு அரசன் பீங்கான் வனைதொழிற்சாலை ஒன்றை ஸ்தாபிக்கும்படி 1710-ஆ ஜனுவரிமீ 23உ கட்டளை பிறப்பித்தான். அந்தக் கட்டளை லத்தீன்-ப்ரென்சு-டச்சு பாஷைகளில் மொழிபெயர்த்து, ஐரோப்பிய அரசர் சம்ஸ்தானங்கள் பலவற்றிலும் உள்ள ஸ்தானாதிபதிகளால் அங்கங்கே பிரசித்தம் செய்யப்பட்டது. அக்கட்டளையில் அரசன் வெளியிட்ட வரலாறாவது:—ஸ்வீடிஷ்தளம் தாவடிவந்ததினிமித்தம் மிகவும் இளைத்துப்போன ஸாக்ஸனி தேசத்தின் க்ஷேமத்தை அபிவிர்த்திசெய்யும் பொருட்டுத் தனையின்கீழ் உள்ள ஜலநிதிபாஷாணங்களைக் கருத்தாய்ப் பார்வையிடுவித்தேன். இந்த விசாரணையை இணக்கமாய்ச் செய்துவரும்படி சில நிபுணரைச் சேகரித்துவிட்டேன். அவர்கள் பலவாறு பரீக்ஷைசெய்து ஒருவகைச் செம்பீங்கான் செய்யும் முறை கண்டறிந்தார்கள். அது இந்தியாவின் பீங்கானைப்போலல்ல, மிகவும் நாணயமானது. அன்றியும் அவர்கள் வர்ணக்கலமும் பீங்கானும் செய்யும்வகை அறிந்தார்கள். அவைகளைக் கத்தியால் வெட்டலாம், சாணைபிடிக்கலாம், தளுக்கிடலாம். இறுதியில் வெள்ளைப் பீங்கானும் செய்து சித்தி கண்டிருக்கிறார்கள். இனி இந்தப் பீங்கான் வகையும் திரளாகச் செய்யலாமெனத் தோன்றுகிறது. துரைத்தனச் செலவில் ஸாக்ஸனியில் ஸ்தாபிக்கப்படும் தொழிற்சாலையில் அன்னிய தேசஸ்தரில் பீங்கான் வனையும் தொழில் நுணுக்கம் அறிந்த நிபுணர்களும், கைப்பாடுபட்டு உழைத்துக் களைதெளிந்தவர்களும் சிலர் வேண்டும். அவர்கள் காரியதரிசிகளுக்கு உதவியாக நியமிக்கப்படுவார்கள்; உயர்ந்த சம்பளம் கிடைக்கும் என வெளியிட்டிருந்தது. அக்காலத்தில் பாட்கர் ஊகித்தறிந்த வித்தையின் வரலாறு இந்தப் பட்டோலையில் தெளிய விளங்குகின்றது.

ஸாக்ஸனி தேசத்திற்கும் அதன் அரசனுக்கும் செய்த பெரிய உபகாரத்திற்காக அரசன் பாட்கரை முதலில் பீங்கான் வனைதொழிற்சாலையின் காரியதரிசியாக்கி, அப்பால் அவனுக்கு பரன் என்னும் பட்டமும் சூட்டினனென்று ஜர்மானியாவில் பிரசுரமான பத்திரி

கைகளில் கண்டிருக்கின்றது. இந்தப் பிரதிஷ்டைகள் அவனுக்குத் தகும்; அதற்குச் சந்தேகம் இல்லை. ஆனாலும் அரசன் அவனைச் சிறக்கணித்து இரக்கமற்று வருத்தி அபகாரம் செய்தான். உத்தியோகஸ்தர்கள் இருவர் அத்தொழிற்சாலைகளுக்கு அதிகாரிகளாய் ஏற்பட்டார்கள். பாட்கரோ அவர்கள் அதிகாரவசப்பட்டுக் குயவருக்கு மேஸ்திரியாயிருந்தான்; அப்பொழுதே அவன் கைதியுமாகி நிர்ப்பந்தப்பட்டான். வேலைகள் எல்லாம் முடிந்தபின்னும் ராத்திரி தோறும் அவனை ஒரு அறைக்குள் விட்டுக் கதவைப் பூட்டுவித்தான். இந்த நிர்ப்பந்தம் எல்லாம் பட்டுப் பட்டு வருந்தி அவன் மனம் குன்றிப்போயிற்று. அவன் அடிக்கடி அரசனுக்கு விண்ணப்ப பத்திரிகை அனுப்பி, சித்தம் இரங்கித் தன் உபத்திரவத்தைத் தணிக்கும்படி பிரார்த்தித்தான். அவ்விண்ணப்பங்கள் சில கல்லையும் மெழுகாய் உருக்கத்தக்கவைகள். அவன் ஒரு விண்ணப்பத்தில் "நான் பீங்கான் வனையும் தொழில் ஒன்றைத்தவிர மற்றெதையும் சிந்தியேன்" என்றும், மற்றொரு விண்ணப்பத்தில் "சூக்ஷமம் கண்ட எவனும் இதுவரையில் செய்த வேலைக்கு மிஞ்ச நான் செய்வேன்; எனக்குச் சிறைமீட்சிமாத்திரம் தந்து உதவப் பிரார்த்திக்கிறேன்" என்றும் எழுதினான்.

அரசன் இவைகளுக்குச் செவிகொடுக்கவேயில்லை. அவனுக்காக ரொக்கவிரயம் செய்யவும் உபகாரம் செய்யவுமாத்திரம் சித்தமாயிருந்தான்; சிறைநீக்கவோ மனம் ஒப்பவில்லை. அவன் பாட்கரைத் தனக்கு அடிமையென்று சிறக்கணித்தான். இந்த நிர்ப்பந்தத்தில் இருந்து துன்புற்றுக் கடைசியில் இத்தன்மையான வருத்தங்களால் நோய்கொண்டு அதிவாலிபத்தில் அவன் 35 வயதிலேயே மரணமடைந்தான். இவ்வாறு அவன் பல துன்பங்கள் அனுபவிக்கும்படி நேர்ந்தது, அவன் தான் ரஸவாதியென்று வீண் பிரதிஷ்டை பேசிக்கொண்டதனாலேயேயன்றி வேறல்ல. ஆயினும் அவனது விடாமுயற்சியால் உலகத்துக்குப் பல நன்மைகள் உண்டாயின.

ஆப்கானிஸ்தானத்தின் அரண் எது?

உருஷியா சக்கரவர்த்தியின் ஆளுகைக்குட்பட்ட பிரஜைகள் பத்துக்கோடி. விக்டோரியா சக்கரவர்த்தினியாரின் இந்துதேசக் குடிகள் இருபதுகோடியே ஐம்பதுலக்ஷம். இவ்விரண்டு ராச்சியங்களுக்கும் நடுவேயுள்ளது ஆப்கானிஸ்தானத்தின் அரண். இதைக் குறிக்கின்ற படத்தை இச்சஞ்சிகையின் முதலிலே பாருங்கள்.

அங்கிலேயருள் பெரும்பான்மையோர், ஆப்கானிஸ்தானத்தை ஒருவராலும் ஏறக்கூடாத பெரிதான மலைப்பிரதேசமென்றும்,

அதில்வசிக்கும் ஜனங்கள் ஐரோப்பியரோடு எந்தவிதத்திலாவது சிறிதும் இணங்கியிருக்கச் சகியாத பயங்கரமான முரட்டுச் சாதியார்களென்றும் நினைத்திருக்கிறார்கள். அன்றியும், அதை வெல்லவேண்டுமானால், உருஷியர் காக்கஸஸ்மலைநாட்டைப் பிடித்த போது போராடினதுபோலவே இதிலும் வெகுகாலமட்டும் சங்கடப் பட்டுக்கொண்டு போராடவேண்டுமென்றும் நினைக்கிறார்கள். அவர் களோடு கூட்டுறவாய் வர்த்தகம் செய்யலாகாதோவென்றால், அப்படிச் செய்யப்புகின் அங்கிலேயரை ஆப்கானியர் எந்நேரம் பார்த்தாலும் கொலைசெய்துகொண்டே இருப்பார்களென்றும் சொல் லுகிறார்கள். உருஷியர் தங்கள் சேனையை அமீரின் நாட்டிற்குள் எங்காவது நடத்தமுயன்றால் அது அங்கிலேயர் இதற்குமுன்னே அவ்வாறு செய்யப்புகுந்தபோது அங்கே பட்ட சங்கடங்களை அவர்களுக்கும் நேருமென்பார்கள். ஆப்கானியர்களுக்குள் ஒரு வருக்கொருவர் சண்டையுண்டாகி இரணகளப்பட்டாலும், யாரே னும் அவர்களோடு சண்டைசெய்யப்போனால் அவர்கள் அத்தனை பேரும் தேசாபிமானத்தினால் ஒன்றுபட்டு அன்னியரோடு எதிர் நிற்பார்களென்கிறார்கள். அவர்கள் மகா கொடியவர்களாதலால் அவர்களோடு ஸகவாஸமே கூடாதென்றும், உருஷியர்கள் ஆப் கானிஸ்தானத்துக்கருகேயுள்ள மற்றச்சாதியார்களைக்கொண்டு ஆப் கானியரைச் சின்னாபின்னப் படுத்தி அமீரின் பலத்தைக் குறைத்து இந்தியாவின்மீது படையெடுத்து வருகிறதாயிருந்தா லும், அவ்வாறு களைத்து லோலாயப்பட்டுவந்த உருஷியர்களை அங் கிலேயர், கைபர், பொலான் என்கிற இவ்விரண்டு கணவாய்களிலும் வழியைக் கட்டிக்கொண்டு அவர்களை இந்தியாவிற்குள்ளே எட்டி யடிவைக்கவும் கூடாமல் துரத்தித்துரத்தியடிக்கலாமென்றும் எண் ணங்கொண்டிருக்கிறார்கள். இவ்வாறு ஆப்கானிஸ்தானம் இந்தி யாவுக்குத் திடனான அரணென்றும், ஆப்கானியரோடு அதிகமாய் ஸகவாசம்பண்ணாமலிருப்பதே நலமென்றும் எண்ணுவதும் முழு தும் பிழையேயாம்.

உருஷியருடைய படையெடுப்பை நிரந்தரமாய்த் தடுப்பதற்கு ஒரேவழிதானுண்டு: இந்துதேசத்திய இராணுவங்களைக்கொண்டு உருஷியரைத் தலையெடுக்கவொட்டாமல் எதிர்த்துச் சண்டைசெய் துகொண்டேயிருக்கவேண்டும். உருஷியர் அதிக்கிரமித்து வராத படி அங்கிலேயர் அவர்களைத் தடுத்துக்கொண்டே இருந்தாலல்லா மல் உருஷியர்கள் இந்தியாவுக்கு வாராதிரார்கள். இவ்விரண்டு ராச் சியங்களுக்கும் இடையே ஸ்திரமான எல்லையொன்றை உறுதியாய் ஏற்படுத்துவது எளிதன்று.

நாம் சிறிதுவிஷயங்களைச் சற்றுச் சீர்தூக்கிப் பார்ப்போமேயா யின், ஆப்கானிஸ்தானத்தில் எல்லையை விதிப்பது எவ்வளவோ மாறு தலையுடையதென்று எளிதில் விளங்கும். இதுவிஷயத்தில் நாமே

நேரில்போய்க் கண்ணாரப்பார்த்தறியவேண்டுமேயல்லது, 1842-ஞூ 1868-ஞூ இவ்விரண்டுதடவைகளில் நடந்த காட்சியைக் கொண்டு ஊகிக்கலாகாது; பூர்வகாலத்து வழக்கத்தை அனுசரித்து மந்திரிமார் உண்மையை அறியாமல் சொன்னயோசனையையாவது, பத்துப்பதினைந்து வருஷங்களுக்குமுன்னே கக்ஷிப்பிரதிகக்ஷிக்காரர்கள் சொன்னதையே பிடிவாதமாய்ப்பற்றி வாதாடுகிறவர்களின் அபிப்பிராயத்தையாவது ஆதாரமாகக்கொண்டால் சிறிதும் பயன்படாது. இதைக்கேட்டால் ராஜாங்கத்துக்கே தீங்குண்டாகும். உருஷியர் ஹீராத்தின் கோட்டைவாசற்படியளவும் வந்துவிட்டார்கள்; அங்கிலேயர் ஹீராத்திலிருந்து காந்தாரத்துக்குப்போகும் வழியண்டையிலிருக்கிற மலைமேல் காவல்செய்துகொண்டிருக்கிறார்கள். இவ்விரண்டிற்கும் இடையே இருப்பதுதான் ஆப்கானிஸ்தான அரண். உருஷியர் இருக்குமிடத்திற்கும் காந்தாரத்துக்கும் உள்ள தூரம் 549 மயில்; அந்தவழியில் வண்டி தாராளமாய்ச்செல்லும். ஹீராத்தின் குடிமதிப்பு 50,000 பேர்; காந்தாரத்தில் 60,000 பேர் வசிக்கிறார்கள். ஆப்கானிஸ்தானத்தில் பிரயாணம்செய்யக்கூடாத கஷ்டமான வழிகளுண்டென்பது மெய்தான்; ஆனால், அப்படிப்பட்டவழி ஒன்றும் உருஷியரும் அங்கிலேயரும் இருக்கும் இடங்களுக்கு இடையே இல்லை; முரட்டுத்தனமான ஜாதியார்கள் அங்கேயிருக்கிறார்களென்றாலும், அவர்கள் உருஷிய சக்கரவர்த்தியின் படைக்கு முன்னாகட்டும் அல்லது இந்தியாசக்கரவர்த்தினியின் படைக்கு முன்னாகட்டும் ஒருபொழுதும் எதிர்நிற்கமாட்டார்கள். தேசாபிமானிகளான ஆப்கானியருண்டென்றாலும், அவர்களை அடக்கி ஆள்வது எளிதன்று; பயங்கரமான மலைகள் உண்டாயினும், அப்படிப்பட்ட மலையொன்றும் வழியைக் குறுக்கே மறித்துக்கொண்டிருக்கவில்லை; மனிதர் ஸஞ்சரிக்கக்கூடாத பாலைவனங்கள் அங்கே இருக்கின்றனவாயினும், ஆப்கானிஸ்தானத்திலுள்ள வழிகளெல்லாம் நல்ல செழிப்புள்ள நாட்டிலேயே இருக்கின்றன; உருஷியராணுவத்தால் கிட்டிச்சேரக்கூடாத கடுவழி முதலியன இருக்கின்றனவென்று நாமாகவே மனோராச்சியம் பண்ணிக்கொள்ளலாமேயன்றி, யதார்த்தத்தில் அவ்வாறான தடையொன்றுமில்லை. இதை இன்னும் தெளிவாய்க் காட்ட ஒருகதைகேளுங்கள்: "ஒருவன் இரண்டு இருப்புப்பாதைகள் ஒன்றோடொன்று சேரும்சந்தியில் நின்றுகொண்டிருந்தான். அவ்விரண்டுவழிகளுள் ஒன்று சமனான நிலத்திலுள்ளதாகையால், எவ்வளவு தூரத்தில் வண்டித்தொடர் வந்தாலும் தெரியும்; மற்றொன்று உயரமான மலையின்மேல் வளைந்துவளைந்து சுற்றிச்சுழன்றிருக்கின்றது. அங்கிருந்தவர்கள் அவன் அவ்வாறு வண்டித்தொடர் இரண்டும் சந்திக்கும்பாதையில் நிற்பதையும், மலைவழியாய் அஞ்சல்வண்டித்தொடர் வருகிறதையுங்கண்டு, ஐயா! அஞ்சல்வண்டித்தொடர்

வருகிறது; பாதையைவிட்டு எட்டி நில்லுமென, அவன் வண்டித் தொடர் வரக்காணேன்; வந்தால் தெரியாதோவென்று அங்கே தானே நின்றான்; உடனே மலைமார்க்கமாய்வந்த வண்டித்தொடர் அவன்மேலேற, அவன் அதனால் அறையப்பட்டு இறந்தான்."

உருஷியர் இந்தியாவின்மேற் படையெடுத்துவருவதும், அங்கிலேய மந்திரிமார் அதை நன்றாய்க் கவனித்துப் பாராதிருப்பதும் மேற்சொன்ன திருஷ்டாந்தத்தோடொப்பாகும். இந்தியாவின்மேற் படையெடுக்கவேண்டுமென்ற விஷயத்தில், இதற்குமுன்னெல்லாம் அவர்கள் ஆரன்ஸ்பர்க்கின் வழியாகவும், மத்திய ஆசியாவின் பாலைவனத்தின் வழியாகவும் வரும்படி பார்த்திருந்தார்கள். அப்பொழுதுள்ள அங்கிலேயமந்திரிமார்கள் காபூலையும், அதற்கருகேயுள்ள இந்துகோசமலையையும் பார்த்து, இவற்றை அவர்கள் எப்படிக் கடந்துவரக்கூடுமென்று திடன்கொண்டிருந்தார்கள். அப்பொழுது தடையிருந்ததென்பது மெய்தான். ஆனால் உருஷியர் 1869-ஆ முதல் அந்தவழியைவிட்டு வேறுவழியாய் வர ஆரம்பித்தார்கள். காஸ்பியன்கடலின் கீழ்க்கரையோரத்தினின்று வடகிழக்காய் மேடுபள்ளமில்லாத சமபூமியின் வழியாகக் காந்தாரத்தை நோக்கிவரத் தலைப்பட்டிருக்கிறார்கள். அங்கிலேயமந்திரிமார்கள் முன்காலத்தில் கொண்டிருந்த எண்ணப்படியே காபூலையும், அதற்கருகேயுள்ள மலையையும்பார்த்து மகிழ்ந்துகொண்டிருக்கிறார்களேயல்லாமல், உருஷியர் வேறுவழியாக ஹீராத்துக்கோட்டை வாசல்மட்டும் வந்துவிட்டார்களே, அதைக்காக்க வேண்டுமேயென்கிற விசாரமேயில்லாதிருக்கிறார்கள். தாங்கள் இத்தனைகாலமாய்க் கொண்டிருந்த எண்ணம் தப்பென்று அவர்களுக்கு இப்பொழுதுதான் புலப்படுகிறது. இனிமேலாவது ஊக்கத்தோடு உருஷியனை இந்தியாவிற்குள்ளே நுழையவொட்டாமல் தடுக்கவேண்டுமானால், தாங்கள் இத்தனைகாலமாக ஆப்கானிஸ்தானத்தைப்பற்றியும் அதன் அரணைப்பற்றியும் கொண்டிருந்த தப்பெண்ணங்களை எல்லாம் அடியோடு விட்டுவிடவேண்டும்.

உருஷியர் இந்தியாவின்மீது படையெடுப்பதைப்பற்றிப் பேசுகையில் 1842-ம் வருஷத்தில் உவெல்லிங்தன் எனும் சேனாபதியும், 1860-70 வருஷம்வரையில் லார்ட்டு லாரன்ஸும், மற்றவர்களும்கொண்டிருந்த அபிப்பிராயத்தைக்கொண்டே மந்திரிமார்கள் இப்போதும் அடிக்கடி கலந்துபேசுவதுண்டு. அக்காலத்தில் உருஷியர் மத்தியஆசியாவில் துர்க்கிஸ்தானத்தின் பாலைவனங்களைக் கைப்பற்றிக்கொண்டிருந்தார்கள். இந்தப் பழங்கதையினால் இப்பொழுதொன்றும் பயனில்லை. அப்போதைக்குமிப்போதைக்கும் எவ்வளவோ மாறுதலுண்டு. அப்போதிருந்தவர்கள் இப்பொழுதிருந்தால் தாங்கள்கொண்ட எண்ணம் பிழைபட்டதென்று கூசாமல் ஒப்புக்கொள்ளுவார்கள். ஸெந்துபீதர்ஸ்பர்க்கிலிருந்து ஹீராத்

தின் வாசல்மட்டும், 3,000 மயில் தூரத்தைக் கடந்துவந்த உருஷியருக்கு, எவ்விதமான வண்டிகளும் தாராளமாய்த் தடையின்றி விரைந்துசெல்லத்தக்க நல்லவழியுள்ள இன்னும் 549 மயில் தூரத்தையும் கடந்துவந்து காந்தாரத்தைக் கைப்பற்றிக்கொள்வதில் என்னவருத்தம்? இங்கிலாந்திலுள்ள மந்திரிமார்களுக்கு இது அசாத்தியமென்று தோற்றுகிறதேயன்றி, "மலையை விழுங்குகிற மகாதேவனுக்குக் கதவுவொரு அப்பளம்" என்கிறவண்ணமாய் மூவாயிரமயிலைத் தாண்டி வந்திருக்கிற உருஷியருக்கு இது ஒரு எட்டிப்பிடிக்குமிடமாகுமேயன்றித் தூரமாகத்தோற்றாது.

இந்தச் சஞ்சிகையுடன் வருகிற படத்தைப்பார்க்கின் ஆப்கானிஸ்தான அரணின் குறைவை இன்னதென்றறிந்து கொள்ளலாம். எங்கே பலமாயிருக்கவேண்டுமோ அங்கேதான் பலக்குறைவு அதிகமாயிருக்கிறது; அந்தவிடத்தை அங்கிலேயரே பலமாய் அரண்செய்யவேண்டும். ஹீராத்து எப்பொழுதும் அங்கிலேயருடைய கைவசத்திலேயே இருக்கவேண்டும்; அதைவிட்டுக் காந்தாரத்துக்குத் திரும்பிவரப்பார்க்கும் யோசனை சிறிதும் சரியேயன்று. காந்தாரம் அங்கிலேயரைவிட்டு எங்கும் ஓடிப்போகவில்லை. அதைப்பற்றி இப்பொழுது கவலையேவேண்டாம். அங்கிலேயர் ஹீராத்தை அரண்செய்வதிலேயே நாட்டமுள்ளவர்களாயிருக்கவேண்டும். இது உருஷியர் கொண்டிருக்கும் பேராசைக்கு முற்றும் நேர்விரோதமாயிருத்தலால், அவர்களுக்குச் சிறிதும் சம்மதமாயிராதென்பது மெய்யே. ஆப்கானிஸ்தானத்தை அரண்செய்துகொள்வதுதான் குறி; மற்றப்படி உள்நாட்டு அரண்களைப்பற்றிப் பின்னாடி மெள்ள மெள்ள யோசித்துக்கொள்ளலாம்.

இந்தியாவின் வரும்படியிலிருந்து ஹீராத்தை இந்துதேசத்தின் படைகளைக்கொண்டு அரண்செய்வது அசாத்தியமென்று சிலர் நினைக்கக்கூடும். பிஷானில் அங்கிலேயராணுவத்தை வைத்திருக்கலாகாதோவென்றால், ஹீராத்துக்கும் அதற்கும் 400 மயில்தூரமிருக்கிறபடியாலும், கட்டைவண்டி ஏறிப்போகவேண்டியிருக்கிறபடியாலும், வீண் வருத்தப்படவேண்டும். ஆப்பிரிக்காயுத்தத்தில், கெயிரோவிலிருந்து கார்த்தோமுக்கு 1,500 மயில் கடுவழி நடந்துபோன அங்கிலேயராணுவத்துக்கு இது ஒரு பொருட்டன்று. இந்தியாவின் திறவுகோலாகிய ஹீராத்தில் 15,000பேர் அடங்கிய இந்தியராணுவமொன்று ஸ்திரமாயிருந்து, அதற்கு ஆப்கான் ஜாதியாரின் உதவியுமிருந்தால் போதுமானது. இவ்வாறு இந்தியாவினின்று ராணுவத்தை ஹீராத்தில் கொண்டுபோய் வைத்திருப்பது வருத்தமன்று; உருஷியரை இப்பால் வரவொட்டாதபடி நிலையாய்த் தடுப்பதே வருத்தமாம்.

மகாராணியாரைப்பற்றிய ஒருவிசேஷம்.

நமது மாட்சிமைதங்கிய விக்தொரியா மகாராணியார் அவர்களுக்கும், சாரீரசம்பத்தாலும் கானபரிக்ஷையாலும் மேன்மையுற்ற மாடம் நில்ஸன் என்னும் சங்கீதவிறலிக்கும் நடந்த ஒரு விசேஷமான ஸங்கதியை இதனடியில் ஒருவாறு எழுதுகிறோம்.

சென்ற 1866-ம் வருஷம் நில்ஸன் என்பவள் விடுமுறைகாலத்தில் லந்தன் நகரத்துக்குவந்து மகாராணியாருடைய ஸங்கீதசாலையில், முன் பாரிஸ்நகரத்தில் பாடியவண்ணம், கேட்டவுடனே அனைவரும் களிகூருமாறு அவ்வளவு இனிப்புடன் பாடினாள். அப்பொழுது அப்பெருமாட்டி தான்பெற்ற பல பரிசுகளுள் மேன்மையாகக்கொண்டாடியது யாதெனின்,உவிண்ட்ஸர்என்னும் அரண்மனையில் அவள் பாடியதைக் கேட்டு மகிழ்ந்து மகாராணியார் அளித்த வைரமும் பத்மராகமும் பதித்த கைக்கடகமேயாம். அப்பரிசோ மகாராணியார் கைகளாலேயே அவள் கையில் அணியப்பட்டது. அதைப்பற்றிய சிறுகதை ஒன்று உண்டு, அதன் விவரமாவது.

அவ்விடத்தில் எளியபெண்களுக்காகப் பாடசாலைவைத்துப் பரிபாலித்துவரும் துறவறம்புகுந்த கன்னியர்கள் தங்கள்மடத்தில் படிக்கும் ஏழைப்பெண்கள் நெடுநாள் மேல்வரிச்சட்டமாக ஞாபகம்வைத்துக்கொண்டிருக்கும்படி சற்றுவந்து பாடவேண்டுமென வேண்டிக்கேட்க, அந்த ஸங்கீதபாரங்கதை, அப்படியே ஆகட்டும், இவ்வேழைப்பெண்களுக்கு இவ்வளவு உதவிசெய்வது எனக்கு வெகு சந்தோஷம்; இதில் எனக்கு யாதொரு வருத்தமும் இல்லையென்று சொல்லி, அதற்காக ஒருநாள் மாலைவேளையில் வருவதாக ஒப்புக்கொண்டாள். பிறகு, அன்றையதினமே மகாராணியாருடைய ஸங்கீதவாத்தியத் தலைவன் ஒருவன் அவர் உத்தரவின்படி நில்ஸனிடம் வந்து, பக்கிங்காம் அரண்மனையில் இன்று சங்கீதகச்சேரி நடக்கிறது; அங்கே தங்களைப் பாட வரும்படி மகாராணியார் .உத்தரவாயிருக்கிறது என்று தெரிவித்தான். இப்பொழுது நீங்கள் என்ன நினைப்பீர்கள்? இப்படி மகாராணியாருடைய உத்தரவு வந்திருப்பதால், "இன்று ஏழைப்பெண்களுக்காகப் பாடவருவதற்கு எனக்கு அனுகூலப்படவில்லை, மன்னிக்கவேண்டும், மற்றொருதினத்தில் ஆகட்டும்" என்று சொல்லி அனுப்புவாளென நினைப்பீர்கள்: அவள் அப்படிசொல்லவில்லை; பின் யாதுசொன்னாளெனில், "இன்று சாயந்தரம் ஏழைப் பெண்களுக்காகப் போய்ப்பாடும்படி ஒப்புக்கொண்டிருப்பதால் மகாராணியாருடைய கட்டளைப்படி நடந்துகொள்ளக்கூடாதவளாயிருக்கிறேனே, இன்னொருசமயத்தில் வரும்படி மகாராணியார் கட்ட

ளையினால் வரக் காத்திருக்கிறேன்; இன்று சரிப்படாது; மன்னிக்க வேண்டும்" என்று வந்த வாத்தியக்காரனிடத்தில் சொல்லிப் போமென்றாள். அதுகேட்டு அவன், "ராணியார் கட்டளையைக் கருத வேண்டாமா? ராஜசபையில் பாடவரமாட்டீரா? இந்த நகரத்துக்கு வருகிற எல்லாப்பண்டிதர்களும் முதல்முதல் ராஜசபைக்குப்போய்க் கவுரவம்பெறவேண்டுமென விரும்புகிறார்கள்: இப்போது நானென்னசெய்கிறது" என்றுசொல்லிச் சிந்தித்துநின்றான். ஆயினும் அந்தப் பெருமாட்டிதான்பாடசாலையார்க்குச் சொன்னவாக்குத்தவறக்கூடாதென்றுசொல்லி அனுப்பிவிட்டாள். அதுகேட்ட வாத்தியக்காரன் நடுங்கி, இந்த ஸங்கீதவிறலிமறுத்துச்சொல்லியதை மகாராணியார் சமுகத்தில் எவ்வாறு போய்ச்சொல்லுகிறதென்று சிந்தித்துக்கொண்டு திரும்பிவிட்டான். ஆயினும் அவனுக்கு வேறு வழியில்லை. அவன் மகாராணியாரிடத்தில் உள்ளது உள்ளபடியேபோய்ச் சொல்ல வேண்டியதாயிற்று. சொல்லியபோது மகாராணியார் "சரிதான், அப்பெண்பாடசாலைக்காரியம் எனக்குத் தெரியும்! இவள் எவ்வளவு தருமசிந்தையுடையவள்! இவள் மனோபாவத்தின் மகிமையை என்னசொல்லலாம்! அப்படியே ஆகட்டும், இன்னொரு பாட்டுக்கச்சேரிக்கு என்று அவள் பேரைப் பதிந்துகொண்டு, என்றைக்குக் கச்சேரிக்குவந்து நம்மை ஆனந்திப்பிக்க அனுகூலப்படுமென்று அவளிடம்போய்க் கேட்டுக்கொண்டு வருவாயாக" என்று அவனுக்குக் கட்டளையிட்டார்.

இப்படி ஸங்கீத விறலியாகிய நில்ஸன் என்பவள் அரண்மனை வாத்தியக்காரனிடம் சொல்லியனுப்பிய விடையும், அதற்கு மகாராணியார் மகிழ்ந்து உரைத்த மறுமொழியும் இவ்விருவருடைய குணாதிசயங்களையும் சிறப்பாய்க் காட்டுகின்றன.

சிறுவர்க்கான கதை.

(தொடர்ச்சி.)

அபெந்தாலியின் பிள்ளைகள் மூன்றுபேரும் தந்தமக்கு ஏற்ற வழியில் பொருள் பெற்றுக்கொண்டு சுகமாயிருந்தார்களென்று சென்ற ஸஞ்சிகையிற் சொன்னோமே. அப்படியிருக்கச் சிலநாளைக்குப் பிறகு அந்தச் சகோதரர்கள் மூவரும் வெளியே யாத்திரை செய்து நாநாதேசங்களையும் பார்க்கவேண்டுமென்ற விருப்பம் கொண்டவர்களாகி, அவரவர் பொருளை அவரவர் பத்திரமாய்க் கட்டி எடுத்துக்கொண்டு ஒன்றாய்க்கூடித் தூரதேசம் போவதாய்ப் புறப்பட்டார்கள். புறப்பட்டுப் போகையில் அவர்களுடைய துரதிஷ்டத்தால் சிறிது தூரத்திற்கப்பால் ஒரு காட்டுவழியிலே கள்ளர்கள் வந்து அவர்கள் கொண்டுபோன பொருளை எல்லாம் பறித்

துக்கொண்டார்கள். அதுகண்டு மூத்தவர் இருவரும் ஒன்றும் தோன்றாமல் மிகவும் மனம்சோர்ந்து நிற்க, சிறியவன் அவர்களைத் தேற்றி அழைத்துக்கொண்டு அவ்விடம் விட்டுச் சென்றான். சென்று சிறிதுதூரம் போகையில் அங்கே ஓர் பட்டணமிருந்தது. அப்பட்டணத்தில் ஒரு வீட்டிலே போய் இறங்கினார்கள். அவ்விடத்திலே கையில் காசு சிறிதுமில்லாமையால் மூத்தவர்களிருவரும் மதி மயங்கி நிற்க, சிறுவன்மாத்திரம் பல தந்திரங்கள் செய்து ஏதாவது அன்றாடம் ஜீவனோபாயத்திற்குத் தேடப்பார்த்தான். அவனுடைய உபாயங்களும் ஒன்றும் ஈடேறவில்லை.

இப்படியிருக்க ஒருநாள் அவன் மிகவும் மனஞ்சோர்ந்தவனாய் அப்பட்டணத்துத் தெருவழியே நடந்துபோகையில் அங்கொரு கிழவி ஒரு தவலையைக் கன்னான் வீட்டிற்குக் கொண்டுபோனாள். அவளைப் பார்த்தவுடனே அஜீபுக்கு ஒரு யோசனை தோன்றிற்று. அதன்படியே அவன் அக்கிழவியண்டைபோய் "அம்மா நீ இந்தப் பழைய தவலையைச் செப்பனிடத்தானே கொண்டுபோகிறாய், இதை என் கையில் கொடுப்பாயானால் எனக்குத் தெரிந்தவனாயில் செவ்வைப்படுத்தித்தருகிறேன்; நான் காசு அகப்படாமல் மூன்று நாளாய்ப்பட்டினிகிடக்கிறேனாகையால், நீ இவ்வளவு சகாயம் செய்வாயானால் உனக்கு ரொம்பவும் புண்ணியமாகும் என்று சொல்லிப் பார்ப்போர் பரிதாபப்படும்படி அவளெதிரில் கண்ணீர்விட்டழுதான்.

அக்கிழவி அதுகண்டு ஐயோ பாவமென்று அவனிடத்தில் மனமிரங்கி, இந்தத் தவலை அடியில் பொத்தல், அதை நீ செவ்வையாய் அடைத்துத் தரவேண்டும்; அதற்குக் கூலி என்னகேட்கிறாய் என்று சொல்ல, அச்சிறுவன் மற்றவேலைக்காரர்களுக்குக் கொடுக்கிற கூலியில் எனக்குப் பாதி கொடுத்தால் போதுமென்று சொல்லி, அவளுக்குத் தான் இறங்கியிருக்கும் வீட்டையும் காண்பித்து, அம்மா, உன் பாத்திரத்தை நான் இன்றைக்குள் சீர்ப்படுத்திவைக்கிறேன், நாளையதினம் வந்து வாங்கிக்கொண்டுபோ என்று சொல்லியனுப்பினான்.

வீட்டிலிருந்த மூத்தவர்களிருவரும் இவன் கையில் இதற்கு வேண்டிய கருவி ஒன்றுமில்லையே, இதை இவன் செப்பனிட்டுக் கொடுப்பதெப்படி என்று ஆச்சரியப்பட்டுக்கொண்டிருந்தார்கள். ஆயினும் அவன் தன் உட்கருத்தை ஒருவருக்கும் வெளியிடவில்லை. வெளியிடாமலே தாங்கள் மேலே தரித்திருக்கும் ஆடைகளை எங்கேயாவது கொதுவைவைத்துப் பணஞ்சம்பாதித்துக்கொண்டு வரும்படி அண்ணன்மார்களுடன் சொன்னான். இவன் ஏதோ உபாயம் செய்யப்போகிறான் என்று எண்ணி அவர்கள் அவன் சொன்னபடியே செய்தார்கள். அவர்கள் உடுப்பெல்லாம் இவ்விதமாகவே செலவழிக்கப்பட்டன.

அண்ணன்மார் கொண்டுவந்துகொடுத்த பணத்தைக் கையில் வாங்கிக்கொண்டவுடனே சிறுவன் கன்னான் கடைக்கு விரைவாய்ச்

சென்று வெகு நேர்த்தியாக இப்பாத்திரத்தைச் சீர்ப்படுத்தித் தரவேண்டுமென்று அவ்வேலைக்காரர்களைக் கேட்டான். அவர்களும் தாமதப்படுத்தாமல் அப்படியே செய்துகொடுத்தார்கள். அதைப் பார்த்து அஜீப் சந்தோஷமடைந்து கிரமமாகக் கொடுக்கவேண்டிய கூலிக்குக் கொஞ்சமதிகமாகவே கொடுத்துப் பாத்திரத்தை வீட்டிற்கு வாங்கிக்கொண்டுவந்தான். மறுநாள் காலையில் அந்தக் கிழவி வந்து தன் பாத்திரம் செப்பனிட்டிருப்பதைப்பார்த்து மிகவும் மகிழ்ச்சிகொண்டாள். அதற்காக அவன் கேட்டகூலியும் சொற்பமாயிருக்கவே, அவளுக்குப் பின்னும் அதிகமான சந்தோஷம் உண்டாயிற்று. அதனால் அவள் அச்சிறுவனை மிகவும் கொண்டாடிக் களிப்போடு வீடுபோய்ச்சேர்ந்தாள்.

வீட்டிற்குப் போய் அவள் சும்மாயிருக்கவில்லை; தான் வெகு நயமாய்த் தவலை செப்பனிட்டுக்கொண்டுவந்த செய்தியை உடனே அவ்வூரெல்லாம் விதைத்துவிட்டாள். அது கேட்டு அவ்வூரில் உள்ளவர்கள் எல்லோரும் தங்கள் தங்களிடத்திலுள்ள பழைய பாத்திரங்களை எல்லாம் உடனே இவனிடத்தில் சீர்ப்படுத்திக்கொள்ளவேணும் என்று அவற்றை வாரியெடுத்துக்கொண்டு அஜீபின் வீட்டுவாயலில் பெருங்கூட்டமாய் வந்து கூடினார்கள். அவர்களைப் பார்த்து அஜீப், இப்பொழுது நீங்கள் இவ்விடம் வந்தகாரியம் என்னவென்று கேட்க அவர்கள், எங்களுடைய பாத்திரங்களையும் கிழவியின் பாத்திரம்போலவே செப்பனிட்டுத் தரவேண்டுமென்று வேண்டிக்கொண்டார்கள். அது கேட்டு அச்சிறுவன் நமக்கு இப்போதுதான் நல்ல காலம் பிறந்ததென்று மிக்க மகிழ்ச்சிகொண்டவனாய், இவ்வளவுவேலைசெய்ய இப்போ எனக்கு ஒழிவு இல்லையே! ஆயினும் நீங்கள் இவ்வளவுவேண்டிக் கேட்கும்போது நானென்னபதில் சொல்லுகிறது; அப்படியே ஆகட்டும், அவரவர் பாத்திரத்தில் ஏதாவது ஒரு அடையாளம் எழுதிவைத்துவிட்டுப்போய் நாளை இந்நேரத்தில் வாருங்கள் என்று சொல்லி அனுப்பிவிட்டான்.

அவர்கள் கொண்டுவந்த பாத்திரங்களெல்லாம் அவன் வீட்டில் ஒரு பெரிய போர்போலக் குவிந்தன. அதைப் பார்க்க அந்தச் சகோதரர் மூன்றுபேருக்கும் அதிக சந்தோஷம் உண்டாயிற்று. இவ்வளவு பாத்திரங்களையும் இவன் ஒருவருக்கும் தெரியாமல் விற்றுப் பணமாக்கிவிடப்போகிறான் என்று மூத்தவர்களெண்ணியிருந்தார்கள். ஆயினும் சிறுவனுடைய கருத்து அதுவன்று; தந்தை சொன்மிக்கமந்திரமில்லை என்றபடி, மோசம் ஒருபோதும் கூடிவராது என்று தகப்பனார் சொன்னதையே அவன் குருவாக்கியமாகக்கொண்டிருந்தான். பின்பு அவன் செய்த உபாயம் என்னவெனில்; சகோதரர்களையும் துணையாக வைத்துக்கொண்டு பார்ப்போர் கண்ணைப் பகட்டும்படி அந்தப் பாத்திரங்களை எல்லாம் அரத்தால் பளபளவென்று அராவிவிட்டான்.

மறுநாள் அவன் குறித்தவேளைக்குச் சரியாகவே பாத்திரக்காரர்க ளெல்லாரும் வந்துநின்றார்கள். அவர்கள் வருவதற்கு முன்னமே அஜீப் பாத்திரங்களை எல்லாம் சித்தமாக வைத்திருந்து, அவர்கள் வந்தவுடனேஒருகையில் பாத்திரத்தை வைத்துக்கொண்டுபணத்திற்காக மற்றொரு கையை நீட்டினான். இது என் பாத்திரம் என் பாத்திரம் என்று சொல்லி அவர்கள் மேல்விழுந்து அததற்குரிய கூலியைக் கொடுத்துப் பாத்திரத்தை வாங்கிக்கொண்டு, எவ்வளவு துரிதத்தில் எவ்வளவு வேலைசெய்துமுடித்தான்! ஆச்சரியம் ஆச்சரியம்! இவன் கையின்கீழ் எத்தனை ஆயிரம் வேலையாட்களிருக்கின்றனரோ தெரியவில்லை என்று ஒருவர்க்கொருவர் சொல்லி வியந்துகொண்டே வீட்டுக்குச் சென்றார்கள்.

அவர்களெல்லோரும் அப்புறம் போனபிறகு அஜீப் தன் தமையன்மார்களைப்பார்த்து, இனி நாம் நிமிஷமேனும் இங்கிருக்கலாகாது; உடனே இவ்விடம்விட்டுப் புறப்படுங்கள் என்றான். அது கேட்டு அவர்கள் மந்தபுத்திகளாகையால் காரியமின்னதெனக் கண்டுகொள்ளாமல், கொதுவைவைத்திருக்கும் தங்கள் தலைப்பாகைமுதலியவைகளை மீட்டுக்கொண்டாலொழிய அவ்விடம்விட்டுப் புறப்படக்கூடாதென்று அதன்பொருட்டுப் போனார்கள். அஜீப் மாத்திரம் எப்படியாகுமோவென்று மனதில் திகில்பட்டுக்கொண்டே வீட்டில் உட்கார்ந்திருந்தான். ஆயினும் கடைசியில் காரியம் அவன் எண்ணியபடியேதான் முடிந்தது. என்னவெனில், தவலையைப் பெற்றுக்கொண்டுபோனவர்களுள் சிலர் வீடு சேர்ந்தவுடனே அதைப் பரீக்ஷித்துப்பார்த்து நடந்த சூது இப்படிப்பட்டதென தெரிந்துகொண்டு அதைப் பின்னும் பலருக்குத் தெரிவிக்க, யாவரும் ஒன்றுகூடி நியாயஸ்தலத்திலே பிரியாதுசெய்து, அஜீபை அவ்விடம் பிடித்துவரும்படி செய்தார்கள். (இன்னும் வரும்.)

சமாசாரம்.

மைசூர் மகாராணி பெண்கல்விச்சாலை. — இப்பெண்கல்விச்சாலை விஷயமாக மைசூர் மஹாராஜா அவர்கள் அதிக சிரத்தையெடுத்துக்கொண்டு அதற்காக ஒருபெரிய கட்டடம் ஒன்று இனாமாகக் கட்டிக்கொடுத்திருக்கிறார். இந்தக் கட்டடம் 23,000 ரூபாய் செலவுசெய்து மஹாராஜா அவர்களுடைய சொந்த உத்தியோகஸ்தர்களுடைய கண்காணிப்பில் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. மைசூரில் ரெஸிடெண்டாகவிருக்கும் மிஸ்டர் கர்டல்ஸ்டோன் என்பவரும் அவர் மனைவியாரும் இக்கல்விச்சாலைக்கு விஜயஞ்செய்ததில், இதற்கீடான பெண்கல்விச்சாலை இந்தியாவின் வடபாகத்தில் எங்குமில்லையென்றும், இச்சாலையின் நல்ல ஸ்திதியைப்பற்றி டப்பரின்பிரபுவுக்கும் அவர் பத்தினியாருக்கும் தெரிவிக்கத் தங்களுக்கு மிகச் சந்தோஷமாயிருக்குமென்றும் சொன்னார்களாம்.

C. K. S. Press, Vepery, Madras. 1885.